# குஜராத்தில் பூமிநடுக்கம்: 14 பேர் உயிரிழந்தனர்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 42
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 11 முஹர்ரம் 15 செவ்வாய்க்கிழமை [24-3-70]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

## 69 பேர் படுகாயம்

அகமதபாத், மார்ச்23

தெற்கு குஜராத்தில் இன்று காலை ஏழரைமணிக்குச் சிறிது முன்னதாக பூகம்பம் ஏற்பட்டது. 14பேர் உயிர் இழந்தனர். 69பேர் படுகாயமடைந்தனர். 100 பேர் வீடிழந்தனர்.

தெற்கு குஜராத்திலுள்ள பல நகரங்கள இன்றுகாலை ஏழரைமணிக்கு சிலநிமிடங்களுக்கு முன்னர் பூமி நடுக்கத்தால் பாதிக்கபபட்டுள்ளன. இருதடவைகள் இங்கு பூமிநடுககம் ஏற்பட்டது. சூரத், புரோச், துளியா, பரோடா, பாவ்நகர் முதலிய நகரங்கள் இப்பூமிநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன இவற்றில் மிகவும் கடுமையாகப் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நகரம் புரோச்சாகும். சூரத்தும் அதன் அருகாமையிலுள்ள நகரங்களும் பூகம்பத்துக்குள்ளான போதும் இங்கு ஒருவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பரோச்சில் பூமி நடுக்கத்தால் இடிந்து தரை மட்டமாகிய கட்டிடங்களிலிருந்து 14 சடலங்கள் மீட்கப்பட்டன. இக்கட்டிடங்கள் இடிந்த போது அதனுல் தாக்கப்பட்டு காயமடைந்ததாகக் கூறப்படும் 66 பேரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குஜராத்தின் தெற்குப் பகுதியிலுள்ள நர்மதை, தப்தி ஆற்றுப்பகுதிகள அதிகம் பாதிக்கப்படவில்லை யெனத் தெரிகிறது. நர்மதை ஆற்றின் குறுக்கேயுள்ள ரயில்பாதை பாலமும் தப்தி ஆற்றுப் பகுதியிலுள்ள நீர்த் தேக்கங்களும் இப்பூகம்பத்தால் பாதிக்கப்படவில்லை.

இப்பூகம்பத்திஞல் ஏறக்குறைய 100 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் இவ்விடி மாடிகள் மத்தியிலேயே அநேகர் அகப்பட்டு காயமடைந்தனர் எனவும் தெரிகிறது.

பம்பாய் நகரங்கள் சிலவற்றிலும் இதே நேரத்தில் பூமிநடுக்கம் ஏற்பட்டதெனினும் அங்கு ஒருவித சேதமும் ஏற்படவில்லை. 1967-ம் ஆண்டு பூனுவிலிருந்து 700 அடிக்கப்பால் இத்தகையதொரு பூகம்பம் ஏற்பட்டதெனவும் அதற்குப் பின்னர் தெற்கு குஜராத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### யுவதி பரிதாப மரணம்

வேலணை, திங்கள்

குளிக்கும் போது தவறிக் கிணற்றுள் வீழ்ந்த 17 வயது இளம் பெண் மரணமாஞர். இச்சம்பவம் வேலணையில் நடந்தது. வேலணை கிழக்கைச் சேர்ந்த இராசையா என்பவரது மகளான சகுந்தலா என்பவரே இவ்வாறு பரிதாப மரணத்திற்குள்ளானவராவர்.

முதலில் தமது தம்பியார் ஸ்நானம் செய்வதற்குக் கிணற்றுலிருந்து தண்ணீர் எடுத்து உதவிய சகுந்தலா பின்னர் தாமும் ஸ்நானம் செய்ததாகவும் அப்பொழுது கால்தவறிக் கிணற்றில் வீழ்ந்ததாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திருஎஸ்மகாலிங்கம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். பொலிஸ் தரப்பில் திரு. எஸ். சொர்ணலிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார்.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 21ந் திருவிழாவான இன்று பகல் 10-30 மணிக்கு விசேட அபிசேகமும் மாலை 5-7-30வரை திரு வி. நல்லையாவின் பிரசங்கமும் சுவாமி வீதிவலம் வருதலும் இரவு 8-30-9-30 வரை இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்.

மகாவலி ஒப்பந்தம்

### 'இங்கிராஸ்' வெற்றி

கொழும்பு, திங்.

மகாவலி திசை திருப்பும் திட்டத்தின் முதலாம் கட்ட வேலைகளைப் பெறுப்பேற்று செய்வதற்கான ஒப்பந்தம் யூகோஸ்லாவிய 'இங்கிராஸ்' நிறுவனத்துக்கு கிடைத்திருக்கின்றது. இலங்கை பொறி இயல் கூட்டுத்தாபனம் உப ஒப்பந்தக் காரராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இன்று இத்தகவல் வெளியிடப்பட்டது.

### 7 வயதுச் சிறுமி மரணம்

குருநாகல், திங்கள்

யநீதண்பலவாவைச் சேர்ந்த மஜீத் உம்மா என்ற 7 வயதுச் சிறுமி கடும் எரிகாயங்களுக்குட்பட்டு குருநாகல் ஆஸ்பத்திரியில் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இந்தச் சிறுமி தன் வீட்டு சமையலறைக்குள் அடுப்புக்குப் பக்கத்தே சென்றதால் தற்செயலாக அவள் உடையில் தீப்பிடித்து அவள் கடும் எரிகாயங்களுக்குள்ளானதாக மரண விசாரணையின் போது தெரியவந்தது.

## ஜாதிக சம்பத

## சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத்த சுவீப் முடிவுகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | 10 Q 000157 | ரூ. 61210-00 |
| 2ம் பரிசு | 11 S 001948 | ரூ. 61210-00 |
| 3ம் பரிசு | 09 D 001212 | ரூ. 61210-00 |

கொழும்பில் நடைபெறும் எட்டு நாடுகளின் மாநாடு

# "புதிய 'மண்டலம்' ஒன்றை உருவாக்கும் முயற்சி அல்ல"

## பிரதிநிதிகளை வரவேற்று பிரதமர் நிகழ்த்திய உரை

கொழும்பு திங்கள்

கொழும்பில் நடைபெறும் எட்டு மண்டலசார்பற்ற நாடுகளின் வெளியுறவு காரியதரிசிகள் மகாநாட்டை, புதிய வல்லரசு மண்டலமொன்றை உருவாக்கும் முயற்சி என்று கருதக்கூடாது என்று பிரதமமந்திரி திரு டட்லிசேனநாயகா இன்று கூறிஞர். மத்தியவங்கி கட்டிடத்தில் இன்று ஆரம்பமான மேற்படி மாநாட்டை பிரதமமந்திரி ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்திஞர்.

முக்கியமான ஒரு பிராந்தியத்தில் நமது நாடுகள் இருக்கின்றன. இதனுல் உலகவிஷயங்களில் முக்கிய பங்கேற்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதன்காரணமா

ஞர் அடுத்த மாதம் 13-ந் திகதி தான்சானியாவில் நடைபெறவுள்ள கூட்டுச்சேராக் கொள்கை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்



இந்துசமய பாடத்திட்டமாற்றம்:

## உடன்ரத்து செய்யுமாறு இந்துமாமன்றம் கேட்கும்

கோப்பாய், திங்கள்

''கல்விப் பொதுத்தராதர உயர் வகுப்புக்கான இந்துசமய பாடத்திட்டம் சம்பந்தமாக கடந்த பல ஆண்டுகளாக இடம்பெற்று வந்த தேவாரதிருவாசகங்களுக்குப் பதிலாக புதிய பாடத்திட்டத்தில் கல்வி இலாகா செய்துள்ள மாற்றங்களிஞல் சைவசித்தாந்தமே அழிந்துவிடும் நிலையிலுள்ளது. எனவே இம்மாற்றம் உடனடியாக ரத்துச் செய்யப்படவேண்டும்.'

இவ்வாறு அரசாங்கத்தை கோரும் பிரேரணை இம்மாதம் 27ம் திகதி பயபாலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற விருக்கும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 15 வது ஆண்டு நிறைவுக் கூட்டத்திற் கொண்டுவரப் படவுள்ளது

இந்து ஆலய பரிபாலன மகோதாவை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்றும் இலங்கையிலுள்ள சைவ அன்பர்களால் சிதம்பரம், இராமேஸ்வரம் போன்ற தலங்களுக்குநன்கொடையாகவழங்கிய காணி மற்றும் மடங்களின் வருவாய்களை முறையான முறையில் உபயோகிக்கத்தக்க வழிவகைகளைஏற்படுத்த வேண்டுமென்றும் கோரும் பிரேரணைகளும் இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான ஒரு பிராந்தியத்தில் நமது நாடுகள் இருக்கின்றன. இதனால் உலகவிஷயங்களில் முக்கிய பங்கேற்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதன் காரணமாகவே நமக்குள் பல்வேறு விஷயங்களிலும் பொதுக்கருத்துக்களை உருவாக்கும் வகையில் கலந்துபேசுவதற்காக இங்கு கூடியிருக்கிறோம் என்றார் பிரதமர்'

இலங்கை இந்தோனேஷ்யா ஆகிய இரு நாடுகளினதும் பெருமுயற்சியால் நடைபெறும் இம் மகாநாட்டில் கம்போடியா, இந்தியா, லாவோஸ், நேபாளம், மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர் அடுத்த மாதம் 13-ந் திகதி தான்சானியாவில் நடைபெறவுள்ள கூட்டுச்சேராக் கொள்கை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டுக்கு இந்த மகாநாடு முன்னோடியாகக் கூட்டப்பட்டுள்ளது.

இம்மகாநாடு வரவேற்புரையில் பிரதமர் மேலும் தொடர்ந்து பேசுகையில், ஆசிய நாடுகள் கூட்டுச்சேராக் கொள்கையுடையனவாக ஏன் உள்ளன என்பதை விளக்கிக்கூறி இக் கூட்டுச் சேராக் கொள்கைக் கோட்பாடுகள் பாண்டுங்கிலேயே கூடி உருவாக்கப்பட்டன. இக்கோட்பாடுகளை நமது நாடுகள குறிப்பாக அனுசரிப்பதோடு அவற்றை இன்று உலக விஷயங்களிலும் கடைப்பிடிக்கவேண்டும். நமது நாடுகள (கூட்டுசேராக் கொளகை நாடுகள) நூற்றுண்டுகளாக அன்னியராதிக்கத்தின்கீழ் இருந்தவை. இதனால் அரசியல் பொருளாதார, சமூகப் பிரச்னைகள் பல நமது பொருளாதார அபிவிருத்திக்கு முட்டுக்கட்டைகளாக விருந்தன. எனவே நமது நாடுகள் பொது நோக்கோடும் நல்லெண்ணத்தோடும் பொதுநலத்துக்காக ஒத்துழைத்து பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வுகாணவேண்டும். கூட்டுச்சேராக் கொள்கை நாடுகள் ஒரு தனிப்பட்ட பிரிவை உண்டுபண்ணவில்லை. எனக் கூறிய பிரதமர் இம் மகாநாட்டை ஒழுங்குசெய்ய உதவிய இந்தோனேஷியாவுக்குத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த இரு நாள் மாநாட்டிலும் உலக சமாதானம், மத்திய கிழக்குப் பகுதியில் அரபு இஸ்ரேல் யுத்தநிலை. கூட்டுச்சேரா நாடுகள் பொருளாதார அபிவிருத்தி, இந்து சமுத்திரப்பாதுகாப்பு வியட்னும் யுத்த நிலை, கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டுக்கு பாகிஸ்தானை அழைக்கும் விஷயம் முதலிய விடயங்கள் ஆராயப்படுகின்றன (சி. பி. ஏ.)



## 'படித்துவிட்டுவேலைகேட்டால் விவசாயம் செய்யச் சொல்கிறார்கள்''

— பீலிக்ஸ்

குருநாகல் திங்கள் இன்று இலங்கையில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கைக்கு வேண்டிய அரிசியை இலங்கைதானே உற்பத்தி செய்து கொள்வதாக திருடட்லி கூறுகின்றார். ஆனால் இலங்கையின் விவசாய விருத்தியெல்லாம் பத்திரிகையிலும் வானொலியிலும் மாத்திரம்தான். இவ்வாறு திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா குருநாகல் மாநகரசபை மண்டபத்தில் செனட்டர் டி ஜி வில்லியம் அவர்களுக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினார்.

நாட்டிலுள்ள பிரச்னைகள் அனைத்திலும் பெரும் பிரச்னையாக கருதப்படுவது வேலையில்லாப்பிரச்னை அதிலும் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகள் படும்பாட்டை நினைக்கும் போது மனம் மிகவேதனைப் படுகிறது.

படித்தவாலிபர்கள் வேலை கேட்டால் இவர்கள்விவசாயம் செய்யச் சொல்லுகிறார்களே இவர்களது பிள்ளைகள்யாராவது விவசாயம் செய்கிறார்களா? இப்படி இருக்க இவர்கள் ஏழைகளின் பிள்ளைகளை மாத்திரம் ஏன் விவசாயம் செய்யச் சொல்லுகிறார்கள் என்றார் பீலிக்ஸ்.

## "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 7206-47 |
| பெ. மயில்வாகனம் 44. பொஸ்வல் பிளேஸ் வெள்ளவத்தை காசோலை | 25-00 |
| எஸ். சிவசுப்பிரமணியம், பிறக்ரர் கல்ஸ்டொர்ப் கொழும்பு காசுக்கட்டளை | 10-00 |
| யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் மூலமாக யாழ். மத்திய கல்லூரி சாரண மாணவர்கள் சேர்த்து உதவியது | 101-00 |
| நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை ஆசிரியரும் மாணவரும் | 125-00 |
| காரைநகர் டிப்போ இ. போ, சபை ஊழியர் சேர்த்து அளித்த தொகை | 70-00 |

### மகா கும்பாபிஷேகம்

சுழிபுரம், திங்கள பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஜீர்ணோத்தாரண புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக வைபவம் இம்மாதம் 25-ந் திகதி காலை நடைபெறவுள்ளது.

செய்யப்படவேண்டும்.'

இவ்வாறு அரசாங்கத்தை கோரும் பிரேரணை இம் மாதம் 27ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற விருக்கும் முறையில் உபயோகிக்கத்தக்க வழிவகைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரும் பிரேரணைகளும் இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

சேகமும் மாலை 5-7-30 வரை திரு வி. நல்லையாவின் பிரசங்கமும் சுவாமி வீதிவலம் வருதலும் இரவு 8-30-9-30 வரை இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்.

### காலக்கெடுவுக்கு மந்திரி பதிலளிக்கவில்லையாம்

# சீமெந்துத் தொழிலாளர் வேலைநிறுத்தம செய்தனர்

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை சேர்ந்த833 நிரந்தர தொழிலர்ளர் இன்று அடையாளவேலைநிறுத்தமொன்றை மேற்கொண்டனர். காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் யூனியன் கைத்தொழில் அமைச்சருக்கு 25 கோரிக்கைகள் கொண்ட மகஜர் ஒன்றை 21நாள் காலக்கெடுவுடன் அனுப்பியபோது அது பற்றி அமைச்சர் எதுவித பதிலும் அனுப்பாததாலேயே இன்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தொழிற்சாலையில் வேலை பார்க்கும் 855 நிரந்தரத் தொழிலாளர்களில் 833பேர் இன்று வேலைநிறுத்தம்செய்தனர். 22பேர் மட்டுமே வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

வேலைநிறுத்தம்தொடங்கு முன் ஒரு பிரமாண்டமான ஊர்வலமும் நடத்தப்பட்டது, தொழிற்சாலை பிரதான முகப்பிலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை கீரிமலை வீதிகள் ஊடாக தொழிற்சாலை வாசலை அடைந்தது. இவ்வூர்வலத்தில் ஏராளமான தொழிலாளர் அட்டைகள் தாங்கி சுலோகங்களை முழங்கிச்சென்றார்கள். ஊர்வலத்தின்போது எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறுமல் காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் தலைமையில் 26 பொலிசார் சேவையில் ஈடுபட்டிருந்தனர். திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமான வேலைநிறுத்தம் செவ்வாய்க்கிழமைகாலை 6மணியுடன்முடியுமென்றும் ஊர்வலமும் வேலைநிறுத்தமும் எதுவித அசம்பாவிதமும் இன்றி அமைதியாக நடைபெற்றதாக தொழிற்சங்க தலைவர் தெரிவித்தனர்"

இன்று வேலைநிறுத்தம் நடந்ததால் பல ஆயிரம் ரூபா, சீமேந்துக் கூட்டுஸ்தாபனத்துக்கு நட்டம் ஏற்பட்டிருக்கும் என்று கருதப்படுகின்றது.

யாழ் ஆஸ்பத்திரி

## கூரைமீது ஏறிய நோயாளி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், செவ். 'ஐயோ என்னை நஞ்சு மருந்து கொடுத்துக் கொல்லப் பார்க்கிறார்கள் தய்வுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்தியபடி. யாழ்ப்பாண ஆஸ்பத்திரி கூரை முகட்டில் ஏறிநின்ற 14-ம் வாட் நோயாளி ஒருவர் 'பொத்' என்று கீழே குதித்தார்'

இச்சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நடைபெற்றது. யாழ். ஆஸ்பத்திரி பொலிசார் மேலிருந்து குதித்த இந்த நோயாளியை மெதுவாகத் தாங்கிப் பிடித்து அவர் கீழே விழுந்து காயப்படாது காப்பாற்றினர்.

இவர் ஆஸ்பத்திரி 14-ம் மேல் வீட்டு வார்ட்டில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார் என்றும், இவருக்கு 'நிமோனியா எழுப்புச்சன்னி' கண்டிருப்பதாகவும் ஆஸ்பத்திரி ஊழியர் கூறி அவரை மெதுவாக கட்டிலுக்கு அழைத்துச் சென்றனர். (மட்டுவில் நிரு)

## நேரில் நடிகர்கள் தோன்றுவர்

யாழ்ப்பாணம், செவ். இலங்கையில் தயாரிக்கப்பட்ட மஞ்சள் குங்குமம் படத்தைப் பாராட்டி இன்று மாலை 6 மணியளவில் யாழ். திறந்தவெளியரங்கில் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அரசியல்தலைவர்களும் கலந்துகொள்வர்' பட நடிகர் நடிகையர் மேடையில் தோன்றுவர். நகைச்சுவை நாடகமும் இன்னிசைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

பாலைதீவு படகுவிபத்து

## விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ். பாலைதீவு படகுவிபத்து சம்பந்தமாக ஏற்கனவே கைதாகி ஆயிரம்ரூபா பிணையில் இருந்த அருளப்பு சந்தியா, பிலிப் ஜஸ்டின் ஆகிய இருவரும் நேற்று கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர் இருவரையும் அதே பிணையில் செல்லும்படி உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் திரு டயஸ் வள்ளத்தை 10000ரூபா பிணையில் சொந்தக்காரரிடம் கொடுக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

பொலிஸ்வழக்கு இன்னும் தயாராகாமையால் மேல் விசாரணை பின்போடப்பட்டுள்ளது'

நேற்று இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத்த சுவீப் முடிவுகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | 10 Q 000157 | ரூ. 61210-00 |
| 2ம் பரிசு | 11 S 001948 | ரூ. 61210-00 |
| 3ம் பரிசு | 09 D 001212 | ரூ. 61210-00 |

தலா ரூ.306-05 பெறும்200 பரிசுகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 05 o 000476 | 01 N 000547 | 04 F 000182 |
| 10 K 000557 | 01 W 000078 | 07 J 000438 |
| 02 U 000775 | 04 F 000646 | 04 U 000043 |
| 10 Z 000117 | 08 Q 000344 | 01 V 000142 |
| 01 H 001382 | 10 R 000569 | 09 A 000668 |
| 11 Q 000671 | 05 Z 001371 | 01 o 000977 |
| 10 T 001128 | 06 R 001117 | 07 X 001636 |
| 04 Q 001355 | 09 W 000202 | 01 G 001157 |
| 04 X 001078 | 09 N 001653 | 09 M 000075 |
| 08 N 001392 | 05 U 000166 | 10 P 001438 |
| 11 C 000568 | 05 C 000763 | 10 R 001922 |
| 08 H 001460 | 01 R 001511 | 05 V 001981 |
| 04 V 000949 | 02 T 000467 | 05 M 001256 |
| 04 K 001607 | 08 R 001166 | 01 N 001778 |
| 14 Q 000856 | 11 W 000585 | 02 Y 000496 |
| 01 E 000094 | 02 W 001989 | 05 R 000809 |
| 09 V 001451 | 04 W 000234 | 12 Z 001095 |
| 12 N 001942 | 05 F 000403 | 02 o 001682 |
| 01 C 000923 | 06 G 000689 | 07 R 000340 |
| 08 H 000526 | 01 M 000315 | 03 P 001704 |
| 03 R 001294 | 05 Y 001379 | 02 S 000585 |
| 14 Q 001409 | 08 E 000932 | 07 B 000089 |
| 08 P 000491 | 03 H 001486 | 03 S 000993 |
| 01 E 000782 | 13 C 000191 | 10 E 001680 |
| 10 U 000142 | 07 Y 000202 | 13 V 000256 |
| 09 Z 001397 | 06 U 001220 | 13 C 000311 |
| 14 H 001729 | 10 N 000966 | 05 Y 001290 |
| 07 A 000782 | 07 S 001509 | 07 W 001826 |
| 05 o 000080 | 10 D 001281 | 06 W 001123 |
| 09 A 000616 | 07 U 000651 | 01 Q 001355 |
| 12 S 000757 | 05 B 000950 | 11 Y 000998 |
| 06 V 000218 | 11 O 001645 | 02 U 000547 |
| 11 Z 000463 | 14 O 001531 | 07 T 001066 |
| 02 B 000140 | 10 J 000761 | 11 T 000252 |
| 11 G 000086 | 09 Z 000047 | 01 Z 000111 |
| 07 Q 000910 | 09 G 000678 | 07 B 001712 |
| 05 L 001464 | 05 W 001446 | 11 J 001531 |
| 10 E 000624 | 10 A 001627 | 06 M 001201 |
| 05 K 001438 | 01 V 001706 | 05 V 001074 |
| 11 L 000127 | 09 N 001836 | 12 U 004791 |
| 01 R 000452 | 11 R 000650 | 01 N 000710 |
| 03 P 000146 | 05 R 000637 | 05 Q 000948 |
| 11 N 000057 | 12 R 000641 | 01 U 000717 |
| 02 J 000849 | 06 o 000321 | 14 S 000948 |
| 03 K 001364 | 11 V 001579 | 07 A 000801 |
| 06 S 001448 | 03 Z 000932 | 08 T 001167 |
| 04 N 001110 | 05 G 001502 | 07 Y 000808 |
| 12 H 000859 | 05 H 001222 | 05 A 001240 |
| 03 C 000393 | 04 Q 000856 | 12 H 000121 |
| 10 B 001042 | 14 o 000621 | 06 J 000047 |
| 09 N 000160 | 03 T 000555 | 02 F 001218 |
| 12 N 001218 | 06 W 000871 | 10 C 000332 |
| 05 M 001450 | 03 J 000237 | 14 Y 000470 |
| 12 E 001734 | 03 Z 000645 | 08 H 000953 |
| 09 B 000586 | 08 J 001287 | 04 E 001467 |
| 03 N 001784 | 13 G 001777 | 09 F 001404 |
| 11 K 001765 | 02 P 001094 | 02 N 000543 |
| 12 F 000628 | 12 W 000459 | 01 K 001654 |
| 11 E 000162 | 01 N 000261 | 14 D 000488 |
| 11 P 000597 | 11 H 001656 | 12 O 001282 |
| 02 Y 000870 | 10 O 000799 | 14 H 001402 |
| 09 H 001667 | 04 D 001618 | 09 L 001122 |
| 05 M 001424 | 02 o 001715 | 03 Y 001319 |
| 06 L 001372 | 01 W 001372 | 11 C 000593 |
| 07 Y 001977 | 02 T 001768 | 13 E 001349 |
| 14 P 000059 | 14 U 001568 | 12 N 000299 |
| 05 C 000762 | 11 N 000677 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரில் ஆறு பரப்புக்காணி முழுவதும் நாற்பத்தையாயிரம். பகிர்ந்தும் வாங்கலாம். கடனும் கிடைக்கும். வெஸ்ட்டன். தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 1918

### தேவை

பீடி சுற்றத் தெரிந்த பெண்கள் தேவை. கிளிநொச்சி தொகுதியைச்சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரடியாகவோ, கடித மூலமோ தொடர்புகொள்ளவும். திருமதி நடராசா, ஸ்ரீறங்கன் பீடிக்கம்பனி, 37, திருநகர், கிளிநொச்சி. 1942

செங்கலடியில் ஸ்தாபிக்கப்படும் ஒரு தொழிற்சாலைக்கு கடைச்சல் தொழிலாளி, மின்சார ஒட்டுவேலை செய்பவர், ட்ரக்டர் உதிரிப்பாக விற்பனையாளர், ட்ரக்டர் மெக்கானிக்(டீசல்) மோட்டர், டைனமோ றிவைன்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. ஐந்து வருட அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. 31-3-70 க்குமுன் நேரில் வரவும். ஜப்ஞ பிறவுண்ஸ், 20/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1943

## ஆசனக் கோவிலின் கிரிக்கெட போட்டி

யாழ்ப்பாணம், செவ்

இம்மாதம் 30ம் திகதி 'உயிர்த்த திங்கட்கிழமையை' முன்னிட்டு யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலின் ஆதரவுடன் மாபெரும் கிரிக்கெட் மென்பந்துப் போட்டி ஒன்று நடைபெறவிருக்கின்றது'

இப்போட்டி ஆசனக் கோவிலின் இளைஞர் கோஷ்டிக்கும் சங்கீத இளைஞர் கோஷ்டிக்குமிடையில் கோவிலின் திறந்தவெளியில் நடைபெறவிருக்கின்றது.

இந்த இரு கோஷ்டிகளிலும் யாழ். ஆசனக் கோவிலில் மதகுருமார்களும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (தே நி)

## மண்டலாபிஷேகம்

தாவடி, செவ்வாய்

இன்று தாவடி வேதவிநாயகராலயத்தில் மண்டலாபிஷேகம் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நாற்பது நாட்கள் நடைபெறும்.

## யாழ்ப்பாண மாநகரசபை

### அபாயகரமானவையும். அருவருப்பானவையுமான வியாபாரங்களுக்குரிய அனுமதிச்சீட்டு—1970

மேற்படி வியாபாரங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களுக்காக யாழ்ப்பாண மாநகரசபையினால் ஆக்கப்பெற்று அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்ற உபவிதிகளுக்கமைய.1970ம் ஆண்டிற்குரிய அனுமதிப் பத்திரத்தினை அதற்குரிய பணத்தினை மார்ச் மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக சபை அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

மேல்குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன் உத்தரவுப் பத்திரங்கள் பெறத் தவறுபவர்கள்மீது சட்டப்பிரகாரம் வழக்குத் தொடரப்படும் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஏ. ரி. சுந்தரம்.
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-3-70 2008

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, திங்.

அண்மையில் நடைபெற்ற தீவுப்பகுதி பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

'ஏ' பிரிவு 16—19 வயதுக் குட்பட்ட (பெண்கள்): கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் கல்லூரி, ஆண்கள்: கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்,

'பி' பிரிவு 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்: புங்குடுதீவு றோமன கத்தோலிக்க பாடசாலை, 16 வயதுக் குட்பட்ட பெண்கள்: புங்குடுதீவு றோ. க. பாடசாலை, 13 வயதுக் குட்பட்ட ஆண்கள்: நாரந்தனை கத்தோலிக்க ஆண் பாடசாலை, 13 வயதுக்குட்பட்ட பெண்கள்: ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பெண் பாடசாலை.

## தீர்த்தோற்சவம்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம்தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் தீர்த்தத்திருவிழா கோவில் கேணியில் முதல்முறையாக நேற்றுப் பகல் நடைபெற்றது.

## தேவை

துன்னாலை தெற்கு கிளான் ப. நோ. கூ. சங்கத்திற்கு உடனடியாக முகாமையாளர் தேவை.

பிணை: காசு ரூபா 2000/- ஆதனம் ரூபா 2000/-

சம்பளத் திட்டம் சகலபடிகளும் உட்பட

100 — 200

20 X 60

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி அனுபவத்திற்கேற்ப சம்பளத் திட்டத்தில் அமர்த்தப் படுவர். கூட்டுறவுப் பயிற்சியும், கணக்கெழுதுவதில் அனுபவமுமுடைய விண்ணப்பதாரிக்கு விசேட மதிப்பளிக்கப்படும். 31-3-70க்கு முன் பதிவுத்தபால் மூலம்

காரியதரிசி,
கிளான் ப. நோ. கூ. சங்கம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குக.

க. தர்மராசா,
கௌரவ காரியதரிசி,
2009 21-3-70.

## பரிசு பெறுவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கே. பி.எம் நாடகமன்றம் நடாத்திய 'நீருற்று' கேள்விப் போட்டியில் பரிசு பெறுபவர் விபரம் வருமாறு:-

எ வி சந்திரா மீசாலை, செல்விஞானம்பிகை மீசாலை சிவபாக்கியம் கொட்டடி, எஸ், தங்கராணி தெல்லிப்பழை, சு. மரியதாஸ் ஆனைக்கோட்டை. இவர்களுக்கு இம்மாதம் 30-ந் திகதி பரிசு வழங்கப்படும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 24—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர

# யாழ். மாவட்ட அரசாங்க கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் மாவட்ட அரசாங்க விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த வாரம் யாழ். பொலிஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இம்முறை இச்சுற்றுப் போட்டி இரு கட்டங்களாக நடாத்தப்படுகின்றது. ஒன்று அரசாங்க இலாகாக் கோஷ்டிகளும் வெளிக் கழகங்களும் ஒன்றுசேர்ந்து பங்குபற்றும் சுற்றுப்போட்டியும், மற்றது அரசாங்க இலாகாக்களுக்கு மட்டும் நடாத்தப்படும் சுற்றுப் போட்டியென இரண்டாக நடாத்தப்படுகின்றது.

பொதுவாக நடாத்தப்படும் சுற்றுப் போட்டியில் 11 கோஷ்டிகள் பங்கு பற்றுகின்றன. இக்கோஷ்டிகள் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஏ பிரிவில் பங்குபற்றும் காஷ்டிகளின் விபரம் வருமாறு: யாழ் பொலிஸ் விளையாட்டுக் கழகம், சிறைச்சாலை விளையாட்டுக் கழகம், சிங்க ளீஸ் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை யுனைடட் கழகம், கடற்படை 'ஏலாரு விளையாட்டுக்கழகம்மோகனதாஸ் விளையாட்டுக் கழகம்,

'பி' பிரிவில் பங்குபற்றும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு: வல்வை யுனைட்டட் கழகம், இ போ ச விளையாட்டுக்கழகம் பலாலி இராணுவ விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாண கரபந்தாட்டக் கழகம், சிமெந்து கூட்டுஸ்தாபன விளையாட்டுக்கழகம்.

### இலாகாக்கள் போட்டி

அரசாங்க இலாகாக்களுக்கு மாத்திரம் இரு பிரிவாக நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் மொத்தம் ஏழு கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

'ஏ' பிரிவு: யாழ். பொலிஸ் கோஷ்டி, இ போ ச கோஷ்டி யாழ் சிறைச்சாலைக்கோஷ்டி கச்சேரிக் கோஷ்டி,

'பி' பிரிவு: பலாலிஇராணுவம், சிமெந்து கூட்டுஸ்தாபனம், கடற்படை கோஷ்டி.

இம்முறை இச்சுற்று ப் போட்டி 'செட்டப்' முறையிலேயே நடைபெறவிடுக்கிறது. (தே. நி)

## தலா ஒருகோல் போட்டன

மாவிட்டபுரம், திங்கள்

ஊறணி சென். அந்தனிஸ் விளையாட்டுக்கழகமும் குருநகர் விளையாட்டுக் கழகமும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் ஊறணி கோஷ்டி அதிர்ஷ்டம்மூலம் வெற்றி பெற்றது.

காங்கேசன்துறை தமிழ்க் கனல்மன்ற ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மேற்படி இரு கோஷ்டிகளும் மோதிக்கொண்டன.

முதலில் ஊறணிகோஷ்டியைச் சேர்ந்த எம். அருளப்பு ஒரு கோலைப்போட்டதையடுத்து குருநகர்வீரர் ...சையாவும் ஒரு கோலைப் போட்டார்.

இதைத் தொடர்ந்து இரு கோஷ்டிகளும் கோல்போட முயற்சி எடுத்தும் அது பயனளிக்கவில்லை. ...போட்டிக்குரிய நேரம்

# இன்று ஆரம்பமாகும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று யாழ் விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது. இச்சுற்றுப்போட்டியில் பத்துககுமதிகமான கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. கடந்த பல வருடங்களாக இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுது இருந்துவந்த கல்வி இலாகாக் கோஷ்டி இம்முறை இப்போட்டியில் கலந்துகொள்ளுகின்றது.

கடந்த இருவருடங்களாக இச்சுற்றுப்போட்டியில் சாம்பியனாகஇருந்துவரும் தபால் இலாகாக் கோஷ்டியும் இவ்வருடம் அரசாங்க இலாகாக்களிடையே நடைபெற்றுமுடிந்த உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் சாம்பியனாக வந்த பொலிஸ் கோஷ்டியும் முதல் நாளான இன்று போட்டியில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது, (தே-நி)

## மணிக்கூடு திருட்டு வழக்கு

### குற்றத்தை எதிரி ஒப்புக்கொண்டார்

வல்வெட்டித்துறை, திங்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த அ தங்கராசா அல்லதுமரியதாஸ் என்பவர் கடந்த வருடம் ஆவணி மாதம் 2-ம் திகதி உடுப்பிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ...சின்னமணிக்குச் சொந்தமான ரூபா 1500 பெறுமதியான மணிக்கூட்டைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை ...ஜிஸ்

## பரீட்சையில் ஆள்மாருட்டம்

முசலி, வியா

அரசாங்க ஊழியருக்கான சிங்களத்தேர்ச்சிப் பரீட்சை அண்மையில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் ஆங்கில வித்தியாசாலையில் நடைபெற்றது. நீர்ப்பாசன இலாகா ஊழியருககாகப் பரீட்சை எழுதப் போன ஒருவர் பரீட்சை மேற்பார்வையாளர் கையுமெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

பின்பு அந்த நபர் பொலிசில் ஒப்படைக்கப்பட்டு பிணையில் விடுபட்டார்.

## அஞ்சலிக்கூடடம்

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு தமிழாசிரியர் சங்கம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கூடி காலஞ்சென்ற இந்துபோட் எஸ், இராசரத்தினம் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்து அஞ்சலிசெலுத்தியது வித்தியாலய அதிபர் திரு. செ சீனிவாசகமும் வேறுபலரும் உரையாற்றினர். அமரர் இராசரத்தினம் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## விடுமுறை

கோட்டை, திங்கள்

இம்மாதம் 27ம், 29 ம் திகதிகளில் தபால் கந்தோர்களுக்கு கிறிஸ்தவ பெருநாள்களான பெரிய வெள்ளிக்கிழமை, ஈஸ்டர் ஞாயிறு ஆகியவற்றிற்கான விடுமுறை விடப் பட்டுள்ளது. இந்த 2 நாட்களிலும் போயா நாட்களைப்போல் தபால் கந்தோர்களில் வேலைகள் நடை

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 12-ம் திகதி [24-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண் வைப்பீர்கள்.

**ரிஷபம்-** தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப்பெறுவீர்கள்.

**மிதுனம்-**வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்தவிடயத்தில் நஷ்டமேற்படலாம். நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

**கடகம்-** இளமைநினைவுகள் நிழலாட்டம்போடும். காதல்கணை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

**சிம்மம்-** பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தற்பெருமைக்காக தவறான பாதையில் காலடி எடுத்து வைக்கநேரிடலாம். தொழில்துறையிலும் தயக்கநிலை தென்படும் அவதானம் நன்று.

**கன்னி-** பணவிவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். எந்தவிடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும். நாவடக்கம் மிகவும் விரும்பத்தக்கது.

**துலாம்-** குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவுமுறைகளில் அபிவிருத்தி காணப்படும். அமைதியுடன் காரியங்களை சாதிப்பீர்கள். வசீகரப்பேச்சு வெற்றியை தேடித்தரும்.

**விருட்சிகம்-** சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும், வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் உசாராகஇருக்கவேண்டும்.

**தனுசு-** அறிவுப்பணியில் அதிக ஆர்வம் பிறக்கும். ஆராய்ச்சியாளர்களுக்கு புதிய துப்புக்கள் கிடைக்கலாம். வாகனசாரதிகள் பயனடைவர். தாய்வழி ஆதரவும் அவசியம் கிடைக்கும்.

**மகரம்-** பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களுடைய நற்பை பெறுவீர்கள் வீட்டில் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு.

**கும்பம்-** வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும் அடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும், நல்லதைச் செய்யினும் வீண்பழி கேட்க நேரிடும், வெளியிடத்துக்கடிதம் வேதனையைத் தரலாம், திடசித்தம்வேண்டும்:

**மீனம்-** குடும்பத்தில் மகிச்சிகரமான சம்பவம் இடம் பெறும், பெரியோர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும் பொருள்வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும் பொன்னானதினம்.

## 7590 தம்பதிகள்

கொழும்பு, திங்கள்

சட்டபூர்வமாகத் திருமணப் பதிவுசெய்யாமலிருந்த 7590 பேர் இதுவரை தங்கள் திருமணங்களைப் பதிவு செய்துள்ளனர், சட்டபூர்வமாகத் திருமணம் செய்தவர்களைப் பதிவுசெய்யும்படி உள்நாட்டமைச்சு தெரிவித்தமைக்கு அமைய இப்பதிவு நடைபெறுகிறது, இவர்களுக்கு விவாகப் பதிவு உறுதிப்பத்திரமும் இலவசமாகவே வழங்கப்பட்டுவருகிறது.

## இடமார்றம்

கோப்பாய், திங்கள்

...குகலை அரசினர் தமிழ்வித்தியாலயத்தில் ஆசிரிராகக் கடமையாற்றிய திரு. எஸ்.

பதியப்பட்ட

## பதில் ஊழியா அதிருப்தி

கோப்பாய், திங்கள்

சம்பள நிர்ணயசேவைக் கமிஷனல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள புதிய சம்பளத்திட்டச் சுற்றறிக்கைபதியப்பட்டபதில்ஊழியர்களைப் பொறுத்தவரையில் திருப்திகரமாக அமையவில்லையாம். இதனல் மேற்படி ஊழியர்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். சம்பளககமிஷன் தொழிலாளர்களது சம்பள விகிதத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைத்துள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ராஜா (யாழ்ப்பாணம்)
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேகம் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நாற்பது நாட்கள் நடைபெறும்.

கேணியில் முதல்முறையாக நேற்றுப் பகல் நடைபெற்றது.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த

ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்

விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு

நடித்த

பந்தயம்

பாடல்கள்:

கண்ணதாசன்

வெற்றிகரமான 2 வது மாதம்

கெப்பிட்டல்

(கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி



பாலையா

நாகேஷ்

நம்பியார்

ஏ.வி.எம். ராஜன்

மனோரமா

மற்றும்பலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்

தில்லானா மோகனாம்பாள்

A.P. நாகராஜன்


சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 புல்லாங்குழல், 7-45 விளையாட்டு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30செய்திச் சுருக்கம்.


வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30,10-00

பிரிபோயா,போயா 2-30மணி

ஜெமினி - சாவித்திரி

நடித்த

அதிசயத் திருடன்

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30 9-30

பிறிப்போயா, போயா 2-30

குங்குமம்

வல்வெட்டித்துறை

றஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா,போயா 2-30

ரவிச்சந்திரன் — ஜெயலலிதா

நடித்த

மகராசி

REGAL JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m

Poya, Prepoya 4 shows

VAN RAIAN EXPRESS

MANOHARA

JAFFNA

Now showing

Daily 4-45 7 & 9-45 p.m

I LOVE YOU ALICE

(Adults Only)


போட்டார்.

இதைத் தொடர்ந்து இரு கோஷ்டிகளும் கோல்போட முயற்சி எடுத்தபோதும் அது பயனளிக்கவில்லை.

போட்டிக்குரிய நேரம் முடிந்தும் இரு கோஷ்டிகளும் மேலும் கோல் போடாததால் மேலும் 20 நிமிடம் விளையாடச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது. அப்போதும் கோல் போடாததால் இறுதியில் அதிர்ஷ்டம் மூலம் ஊறணி வெற்றியீட்டியது.

## வாலிப முன்னணி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கந்தர்மடம் கைலாய பிள்ளையார் கோவிலடி தமிழரசு வாலிபமுன்னணிக் கிளை கூடி புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தது.

தலைவர்: சு. சண்முகராசா, உபதலைவர்கள்: கு. சோதிராசா, என். எஸ். தியாகராசா, செயலாளர்: மா. சு. குணராசா, உதவிச் செயலாளர்கள்: க. செல்வராசா, மனோகரன், பொருளாளர்: க. இரத்தினசிங்கம். சு. குகனேஸ்வரன், ஏ. சத்தியானந்தன், க. சுதந்திரநாதன், ஆ. நகுலேந்திரன். செ. யோதராசா, ஏ. அருளானந்தம், செ. பற்குணானந்தம், வே சிவலிங்கம், மூ. கனகசபாபதி, க. பேரின்பநாயகம், த. பஞ்சாட்சரம், லோகேஸ்வரன், த. தளையசிங்கம், கு. கனகரத்தினம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

நல்லூர் அபேட்சகர் திரு இ. மு. வி. நாகநாதனுக்குத் தேர்தல் கட்டுப்பணம் கட்டுவதென்றும், தேர்தல் நிதி சேகரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

## த. கா. கிளை நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை - சரவணையைச் சேர்ந்த சோளாவத்தைவட்டாரத்தில் தமிழ்க்காங்கிரஸ் கிளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டபோது நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. என். கந்தையா, உபதலைவர் திரு. எஸ். தம்பு, காரியதரிசி திரு கே பரநிருபசிங்கம், உப காரியதரிசி திரு எஸ் தவராசா, தனாதிகாரி திரு கே சோமசுந்தரம். நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

ரூபா 1500 பெறுமதியான மணிக்கூடடைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. [illegible]க்கின ராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புகொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரியை கை அடையாளம் கொடுக்கும்படியும் இம்மாதம் 28-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை ஒத்திவைத்தார்.

## ச. ச. நிலையத்தின் நோக்கம்

சுழிபுரம், திங்கள்

கிராமத்தின்அத்தியாவசிய கருமங்களான பாதைகள் செப்பனிடல், சமாதானப் பணிகளை நிறைவேற்றுதல், சிறுதொழில் விருத்திகளை ஆரம்பித்தல், சேமிப்புகள் செய்தல், கல்வி அறிவு வளர்ச்சிக்கு பாடசாலை மற்றும் வாசிகசாலை ஆகியவற்றை நடத்துவதே சனசமூக நிலையத்தின் நோக்கமாகும்'' என சுழிபுரம் கணேச வாசிகசாலைப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. சு. கந்தசுவாமி குறிப்பிட்டார். மற்றும் பலர் பேசிய பின்னர் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய நிர்வாகிகள்

கைதடி, திங்கள்

கைதடி கிழக்கு இளைஞர் விவசாயக் கழக புதுவருட உத்தியோகத்தர் விபரம்வருமாறு: போஷகர் எஸ் என் ஜெயதாஸ், தலைவர்: வி கே இராசையா, உபதலைவர்: ரி நாகராசா, செயலாளர்: வி எஸ் பொன்னம்பலம், உபசெயலாளர்: என் லோகநாதன், பொருளாளர்: ரி இராஜேஸ்வரன், பரிசோதகர்: வி எஸ் செல்லத்துரை

## கொக்குவிலில் மல்யுத்த விழா

தாவடி, திங்கள்

கொக்குவில் பாலன் உடற்பயிற்சிக்கழக ஆதரவில் கொக்குவிலில் மல்யுத்த விழாவொன்று நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 29-ம் திகதி கொக்குவில் கிராமச் சங்கத்தலைவர் திரு சி கா சபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவை யாழ். பொலிஸ் உதவி அதிபர் திரு. எஸ் பி டி சில்வா குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

நாள்களான பெரிய வெள்ளிக்கிழமை, ஈஸ்டர் ஞாயிறு ஆகியவற்றிற்கான விடுமுறைவிடப் பட்டுள்ளது. இந்த 2 நாட்களிலும் போயா நாட்களைப்போல் தபால் கந்தோர்களில் வேலைகள் நடைபெறும்.

## சர். ஜோன் புகார்

கோட்டை, திங்கள்

தமக்குச் சொந்தமான தண்ணீர் இறைக்கும் இரு இயந்திரங்கள் திருடப்பட்டுள்ளதாக முன்னைநாள் பிரதமர் சர். ஜோன் கொத்தலாவலை செய்து கொண்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

## இடமாற்றம்

கோப்பாய், திங்கள்

ருகலை அரசினர் தமிழ்வித்தியாலயத்தில் ஆசிரிராகக் கடமையாற்றிய திரு. எஸ். சோமாஸ்கந்த ஐயர் அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்துக்கு இம்மாதம் 15-ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

0 0 0

சங்கானை, திங்கள்

சங்கானை உபதபாற் கந்தோர் இம்மாதம்21-ம்திகதி தொடக்கம் யாழ். பொன்னாலை வீதியில் பழைய காரியாதி காரியாலயம் இருந்த இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அதிருப்தி அடைந்துள்ளனர். சம்பளக்கமிஷன் தொழிலாளர்களது சம்பள விகிதத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைத்துள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


உதாரணமாக 14 நாட்கள் வேலை செய்யும் பதில் ஊழியர் ஒருவரின் பழைய சம்பளத்திட்டத்தின்படி புதிய அறிக்கையில் சுமார் 15 ரூபா குறைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மேற்படி கமிஷன் நியமனத்தின் உண்மையான பலனை அடையமுடியவில்லை என அவர்கள் கூறினர்.


10,000

மசி-பேர்குசன்

உரிமையாளர் பிழை

விட்டிருக்க முடியாது.



10,000 மசி – பேர்குசன், நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில் 75% மானவை.

10,000 மசி – போகுசன உரிமையாளரே இத் ட்ராக்டரின் வேளாண்மைப் பாவனைச் சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி – பேர்குசன் ட்ராக்டர்கள், பல கோடி ரூபாய் பெறுமதியான பதில் உறுப்புக்கள், துணைகொண்டவை.

10,000 மசி – பேர்குசன். நாடெங்கிலும் இருபத்து மூன்று நிலையங்களில் சேவை வசதி கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி – பேர்குசன் இன்றும் பாவனையில் உள்ளது. எனவே ... 10,000 மசி – பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே!

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்

விவசாயப் பிரிவு,

தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.

டெலிபோன் 93097.

424839



Digitized by Noolaham Foundation.

noolaham.org | aavanaham.org

## ரொடீஷியாவில்

# தேவாலயங்களிலும் இன ஒதுக்கலைப் புகுத்துவதற்குஸ்மித் ஆட்சி முயற்சி

## திருச்சபைத் தலைவர்கள் கடும் எதிர்ப்பு

சாலிஸ்பரி, மார்ச் 23

ரொடீஷியாவில் சட்ட விரோத அயன்ஸ்மித் ஆட்சியாளருக்கு எதிராக அங்குள்ள கிறிஸ்தவ தலைவர்கள் ஒன்றுகூடி போர்க்கொடி உயர்த்தவிருக்கிறார்கள்.

தேவாலயங்களில் இன பாகுபாடுகள் புகுவதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ரொடீஷியாவிலுள்ள கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் ஆலோசித்துவருகிறார்கள்.

தேவாலயங்களில் இன ஒதுக்கல் கொள்கைகளை அயன்ஸ்மித் அரசாங்கம் புகுத்தினால் அதற்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்குவது சம்பந்தமாக ரொடீஷியாவிலுள்ள றோமன் கத்தோலிகக அங்கிலிகன், மற்றும் மெதடிஸ்த சபைகளின் தலைவர்கள் முன்னணி ஒன்றை அமைக்கவிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக ஆராய்வதற்கு இந்தச் சபைகளின் தலைவர்கள் விரைவில் கூடி ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார்கள்.

தேவாலய நடவடிக்கைகளில் இனஒதுக்கல்புகுவதை ஏற்கனவே 5 றோமன் கத்தோலிக்கபிஷப்மார்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். றோமன் கத்தோலிக்க சபைத்தலைவர்களின் இந்த நடவடிக்கைகளை இதரசபைகளின் தலைவர்களும் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள்.

மனித உரிமைகள் விஷயத்தில் கிறிஸ்தவ நம்பிக்கையை வலியுறுத்தும்துணிச்சல்மிக்கநடவடிக்கையென்று றோமன் கத்தோலிக்க தலைவர்களை அங்கிலிக்கன்சபைத் தலைவர் ஒருவர் பாராட்டியிருக்கிறார்.

ரொடீஷியாவில் பெரும்பான்மையினரான கறுப்பு மக்களை ஒதுக்கிவிட்டு வெள்ளையர்களின் ஆட்சிக்கு வழிகோலும்வகையில் அண்மையில் அங்கு அரசியல் திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதன்படி ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப்படுத்திக்கொண்டது. இந்த ஒரு தலைப்பட்சமான குடியரசுப் பிரகடனத்தைஉலகநாடுகள் பலவும் கண்டிததிருககின்றன. ஐ. நா. பாதுகாப்பு சபையில் ரொடீஷியா மீது பலாத்கார நடவடிக்கை எடுக்கும்படி பிரிட்டனை வலியுறுத்தவேண்டுமென்று ஆபிரிக்க நாடுகள் பலவும் கேட்டுக்கொண்டன. ஆனால் ரொடீஷியாமீது பலாத்காரம் பிரயோகிக்க பிரிட்டன் மறுத்துவிட்டது. என்றாலும் ரொடீஷியா மீது தீவிர பொருளாதார நிர்ப்பந்தங்களைத் திணிக்கவேண்டுமென்றும் அதனை தனித்துப்போகச் செய்யவேண்டும் என்றும் பிரிட்டன் விரும்பியது இதன்படி நிறைவேற்றப்பட்ட ஒரு சமரசத் தீர்மானத்தில் ரொடீஷியாவின் பெரும்பான்மை மக்களுக்கு உரிமை வழங்காமல் சிறுபான்மைவெள்ளையரின் ஆட்சிக்கு வழிகோலும் முடியரசுப்பிரகடனத்தை கண்டிக்கப்பட்டதுடன் தீவிரமாக பொருளாதாரப் பகிஷ்காரத்தை அமுல் நடத்துவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்கள் ஆட்சியின் பொறுப்பேற்பதற்கு தடைவிதித்ததோடு மட்டுமின்றி அயன்ஸ்மித் ஆட்சியாளர் இப்பொழுது, சமூக, விளையாட்டு மதத்துறைகளிலும் இன ஒதுக்கலைத் திணிப்பதற்கு முயல்வதற்கு கடுமையான எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

## 'புரளிக்கதை'

லண்டன். மார்ச், 23

"பிரிட்டனில் வந்து குடியேறும் நிறத்தவர்கள் எமது தொகையையும்மிஞ்சிவிடப்போகிறார்கள் என்பது வெறும் ஆதாரமற்றபுரளிக்கதை. இந்த தவறான கருத்தை நாம் ஒழித்துக் கட்டவேண்டும். இந்த எண்ணம் சௌயன்யமான இன உறவுக்குப் பாதகமாக அமையும்."

இவ்வாறு பிரிட்டிஷ் உள் விவகாரமந்திரி திரு ஜேம்ஸ் கலாகன், லண்டனில் இன உறவு விவகாரம் பற்றிய மகாநாடு ஒன்றை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார். இன உறவு சம்பந்தமான இலாகா அமைச்சர்கள், இன உறவு சபை, சமூக விவகார கமிஷன் அங்கத்தவர்கள் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

---

## அஞ்சலியும் பாராட்டும்

சங்கானை, திங்கள்

'ஏனைய மதப்பாடசாலைகளினால் சைவ மாணுக்கரின் கல்விநிலை பாதிக்கப்பட்டிருந்தபோது திரு. சு. இராசரத்தினத்தின் அளப்பரிய சேவையினால் சைவமும் தமிழும் செழிப்புற்றன. வழக்றிஞர்தொழில்மூலம் பெருமளவு செல்வம் தேட வசதியும் வாய்ப்புமிருந்தும் அவர் சைவமக்கள் நன்மை கருதித் தன் வாழ்நாளைக் கல்விப் பணிக்கே அர்ப்பணித்தார்" எனக்கணகராயன்குள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றிய திரு ஏ. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

தலை[illegible] அதிபர்[illegible] மறைந்த பெரியாரின் [illegible]

## தேசீய அரசாங்கம் சாதித்தது என்ன?

— சிறிமா

அத்தனகலை, திங்கள்

பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவும் அவரது அமைச்சர்களும் நாடெங்கும் நாட்டின் 2500 ஆண்டு வரலாற்றில் தங்கள் ஆட்சிக்காலப்பகுதியே சிறந்தயுகமெனக் கூறிக்கொண்டு திரிகிறார்கள் இவர்களை வேறொருவரும் புகழவில்லையாதலால் தாங்களே தங்களைப்புகழ்கிறார்கள். இவர்களது தற்புகழ்ச்சியை மக்கள் வேடிக்கையாகவே எடுத்துக்கொள்வார்கள்.

அத்தனகலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி பணடாரநாக்கா மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித்தலைவி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- நாங்கள் 5 நிதியமைச்சர்கள் வைத்திருந்தோம் தாங்கள் ஒரே ஒரு நிதியமைச்சரை வைத்து நிர்வாகத்தைச் சீராகச்செய்வதாகக் கூறுகிறார்கள் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 25 புள்ளிகளால்உயர்த்தியதுதான் அவர்களின் திறமையா? தேசிய அரசாங்கம் சாதித்தது என்ன? 50 ஆயிரம் பேருக்குவேலைவாய்ப்பில்லாமல் செய்ததும், வாழ்க்கைச் செலவைக் கூட்டியதுமேயாகும் தேசிய அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில் பெற்ற பெரும் கடனை நாட்டுமக்கள் சந்ததி சந்ததியாக செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்.

மேலும் 1965-ம் ஆண்டில் ஐக்கியத்தேசியகட்சி தேர்தல் பிரசாரம் செய்யும்போது எங்களுககு வாக்களித்தால் சமஷ்டிக் கட்சிக்கு வாக்களிப்பதாக அமையும், என்று அவர்கள் கூறினார்கள். சமஷ்டிக் கட்சியுடன் நான் இரகசிய ஒப்பந்தம் செய்தேனா? அவர்கள்தான் அரசாங்கம் அமைக்கத் தமிழரசுக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் பிரதமர் இந்த ஒப்பந்தம் குறித்து மக்களுக்கு ஒன்றும் கூருது இரகசியமாகவிருந்துவிட்டார்.

நான் மற்றக்கட்சிகளைச் சேர்த்து கூட்டணியுருவாக்கியபோது ஐ. தே. கட்சியினர் ஏளனம் செய்தனர். ஜனநாயகத்திற்குக் கூட்டாட்சி உதவாது என்றனர். அவர்கள் இப்பொழுதுதனியாகவா அரசாங்கம் அமைத்தார்கள்? மேலும் ஐக்கிய தேசியக்கட்சிதான் 1965ம் ஆண்டில் கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டது.

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

### புதிய பஸ் சேவை

பச்சிலைப்பள்ளி, திங்கள்

ஆனியவளையிலிருந்து கிளிநொச்சிக்குப் புதிய பஸ் சேவையை கடந்த வாரம் பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் முதலாவது பயணச்சீட்டெடுத்து ஆரம்பித்துவைத்தார். இவ்வைபவத்தில் வடபிரதேச இ போ ச முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை, கிளிநொச்சி உபடிப்போ அதிபர் திரு. பாலசுப்பிரமணியம் மற்றும் இ. போ. ச. அதிகாரிகளும்கலந்துகொண்டனர்.

இ போ ச பொதுமுகாமையாளர் தமது உரையில் 'தாழையடி பஸ் பிரயாணிகள் சங்கமும் ஆடசிமன்ற உறுப்பினரும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பலனகவே இன்று இச்சேவை ஆரம்பிக்கப்படுகிறது, என்றார்.

ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. தொ செபமாலை கிளிநொச்சி டிப்போ அதிபர் திரு. பாலசுப்பிரமணியம் இலங்கை பஸ் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

### தமிழரசுக்கட்சிப் பொதுக்கூட்டம்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டம் நாகர்கோவிலில் திரு. வி. விகந்தசாமி தலைமையில்நடைபெற்றது. திருவாளர்கள் சா வே ஜே செல்வநாயகம், அ அமிர்தலிங்கம், வி தர்மலிங்கம், க துரைரத்தினம், மு ஆலாலசுந்தரம் உட்படப் பல பிரமுகர்கள் வடமராட்சி தமிழரசு வாலிப முன்னணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்தில் தம் கட்சிக்கொள்கைகளை விளக்கிப் பேசினர்

### திறப்பு விழா

தூரத்துக்கப்பால் தூக்கி எறிபப்பட்டனர். மண்டையிலும் கை, கால்களிலும் படுகாயமுற்ற விளையாட்டுப் போதனசிரியர் திரு. தொ. சவரிமுத்து செம்பியன்பற்று அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். கிராமசேவையாளர் சிறு காயங்களுடன் தப்பிக்கொண்டார். மோட்டர் சைக்கிள் பலத்த சேதத்துக்குள்ளானது.

0 0 0

### இடமாற்றம்

பருத்தித்துறையில் கட்டளைக்குரவராகப் பணியாற்றிய வணபிதா ஏ. தேவராசன் இரணைதீவு கட்டளைக்குரவராக இம்மாதம்தொடக்கம் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்திற்கு ஊர்காவற்றுறையில் கட்டளைக் குரவராகப் பணியாற்றிய வணபிதா சுவாம்பிள்ளை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

### காரியாலயத் திறப்புவிழா

பளை பஸ் நிலையத்துக்கு அண்மையில் கடந்த புதனன்று அகிலஇலங்கைத் தமிழ் காங்கிரஸ் கிளைக்காரியாலயம் ஒன்றை கிளிநொச்சித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடவிருக்கும் திரு. வீ. ஆனந்தசங்கரி திறந்து வைத்தார்.

---

## த. சு. கழக செயற்குழுக் கூட்டம்

மண்டைதீவு, திங்கள்

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் மிகவிரைவில் வெளியிடப்படவிருக்கிறது. "இன்றைய அரசியல் கட்சிகள் மக்களைக் கவரக்கூடியதாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தை அமைத்துவிட்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட எதையும் செயல்படுத்தாது விடு

## எதிர்க்கட்சியினர்

## 'இரண்டுபடி அரிசியையும் இலவசமாகக் கொடுப்பார்களா?'

— டட்லி

ஹொறவபொத்தானை, [illegible]திங்கள் விருந்த விவசாயிகள் அரசாங்கத்தின் உணவு உற்பத்

### பதவி இழந்த கம்போடிய தலைவர்

# மாஸ்கோவிலும் பீகிங்கிலும் மாறிமாறி வசிப்பாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸ்கோவிலும் பீகிங்கிலும் மாறிமாறி வசிப்பாராம்

ஹாங்காங், மார்ச். 23

பதவி நீக்கம் செய்யப்பட்ட கம்போடிய அதிபர் இளவரசர் நொரடோம் சிகானுக் தமது அஞ்ஞாதவாசத்தை சீனுவிலும், ரஷ்யாவிலும் வைத்துக் கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிருர்.

இளவரசர் சிகானுக் வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்த வேளையில் கம்போடியாவில் புரட்சி யேற்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தெரிந்ததே. இப்பொழுது இளவரசர் சிகானுக்கும் அவரது குடும்பத்தவர்களும் கம்போடியாவுக்குத் திரும்பி வரும்வரையும் புரட்சி அரசாங்கம் தடை விதித்திருக்கின்றது.

இதனுல் இளவரசர் சிகானுக் சோவியத்யூனியனிலும் செஞ்சீனுவிலும் அடைக்கலம் கோரியிருப்பதாகத் தெரிகிறது. மாஸ்கோவிலும், பீகிங்கிலும் மாறிமாறி வசிக்கப்போவதாக சிகானுக் கூறினுர். இந்த இரு அரசுகளும் தமது செலவினங்களைக் கவனித்துக் கொள்ள ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கிழக்கு மேற்கு ஜெர்மன் உறவுகள்

பொன், மார்ச். 23

கிழக்கு மேற்கு ஜெர்மன் அரசுகள் காமன் வெல்த் நாடுகளைப் போல் ஹை கமிஷனர்களை நியமித்துக் கொள்வதின் மூலம் ராஜீய உறவுகளை பலப்படுத்திக் கொள்ள ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

## சோவியத் தலைமையில் மாற்றம் ஏற்படலாம்?

லண்டன், மார்ச் 23

சோவியத் ஆட்சிபீடத்தில் நெருக்கடிகள் தோன்றியிருப்பதாகவும் அதிகாரப் பொறுப்புகள் அனைத்தையும் பொதுச் செயலாளர் பிரெஸ்னேவ் கைப்பற்றக்கூடிய நிலைமை உருவாகியிருப்பதாகவும் கம்யூனிஸ்ட் நாடுகள் சம்பந்தமான ராஜதந்திர அறிக்கையொன்று கூறுகின்றது. கடந்த சில காலவாகவே கிரெம்ளின் தலைவர்களுக்கிடையில் நெருக்கடி ஏற்பட்டு வந்ததாகவும் ஆனுல் அது வெளியுலகிற்கு எட்டவில்லையென்றும் கூறப்படுகின்றது.

லெனின் நூற்ருண்டு கொண்டாட்டங்கள் இடம்பெறவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தலைமைப்பீடத்திலும் பிரமிப்பூட்டும் மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று ஹேஷ்யங்கள் தெரிவிக்கப்படுகின்றன. சீன-சோவியத் தகராறுகள் தீர்க்கப்படாமல் முற்றிவிடுவதும் கிரெம்ளின் நெருக்கடிகளுக்கு ஒரு காரணமாக அமையலாம் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலைமையில் கட்சியின் அதிகாரத்தையும் ஆட்சிப் பொறுப்பையும் பிரஸ்னேவே தம்வசம் எடுத்துக் கொள்ளக்கூடும் என்று கருதப்படுகின்றது.

1,500 மார்க்ஸியவாதிகள்

## பொலிஸ் நிலையத்தை ‘கெராவ்’ செய்தனர்

புதுடில்லி, மார்ச். 23

மேற்கு வங்காளத்தில் ஹுக்லி கிராமத்தில் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட 1500 பேருக்கு மேற்பட்ட மார்க்ஸீய வாதிகள் பொலிஸ் நிலையமொன்றை ‘கெராவ்’ செய்ய முற்பட்டபோது பொலிசார் பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பொலிஸ் நிலையத்தில் ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டிருந்த சிலரை விடுதலை செய்யக்கோரி இந்த ‘கெராவ்’ நடைபெற்றது. பொலிஸ் வாகனம் ஒன்றுக்கும் தீவைக்கப்பட்டது.

பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்றுபேர் காயமடைந்தார்கள் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

## முஸ்லிம் மாநாடு ஆரம்பம்

பெய்ரூட், மார்ச். 23

இருபத்தைந்து முஸ்லிம் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இன்று சவுதி அரேபியாவில் கூடுகிருர்கள்.

இஸ்ரேலுக்கு எதிரான முஸ்லிம் நாடுகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கு உதவியளிப்பது பற்றியும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சவூதி அரேபியாவில் ஜிட்டாவில் நடைபெறும் இந்த மாநாட்டை மன்னர் ஹுஸைன் ஆரம்பித்துவைப்பார்.

## ‘தீர்த்தமாடினுல் மட்டும் போதாது’

தாவடி, திங்கள்

‘பஞ்சமா பாதகங்கள் எல்லாவற்றையும் செய்து பாவச் சுமையை மனதிலே நிறைத்துவைத்துக்கொண்டு தீர்த்தமாடினுல் மட்டும் பாவம் தீர்ந்துவிடாது. தன் மனதிலே பாவத்தை நீக்கி விட்டோமென எவன் ஒருவன் எண்ணி உணர்ந்து நடக்கின்ருனே அவனே பாவத்தை நீக்கியவனுவன்’

கொக்குவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவத்தன்று நடைபெற்ற தொடர்ச்சிக் கதாப் பிரசங்கம் பூர்த்தி விழாவன்று அளவையூர் அருட்கவி, சீ. விநாசித்தம்பி மேற்கண்டவாறு கூறினுர்.

தொடர்ந்து பத்து நாட்களாக நடைபெற்ற இவ்விழாவிலே பங்குகொண்டு சிறப்பித்த வயலின் வித்வான் எஸ். வைத்தீஸ்வர ஐயர் மிருதங்க வித்வான் எம். என். செல்லத்துரை, கஞ்சிரா வித்துவான் குமுக்கா கணபதியாபிள்ளை ஆகியோரை ஆலயமுகாமையாளர் பாராட்டிப் பேசினுர்.

...த்தில் உரையாற்றிய இரு ஏ தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

தலைமைவகித்துப் பேசிய அதிபர் மு. சிவானந்தம் மறைந்த பெரியாரின் சேவையை மாணவர் அறிந்திருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினுர். இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தேர் முட்டி இடிந்து விழுந்தது

மண்டைதீவு, வியா

பல வருடகாலமாக பழுதடைந்து இடிந்துவிழும் தறுவாயில் காணப்பட்ட மண்டைதீவு, திருவெண்காடு சித்திவி நாயகர் கோவில் தேர்முட்டி (தேர்க்கொட்டில்) திடீரென இடிந்து விழுந்ததால் அதற்குள் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருந்த திரு. வே. இராசரத்தினமும் மனைவியும், குழந்தையொன்றும் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர் தப்பினர்.

திரு. இராசரத்தினத்தின் கையிலும் காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. கட்டிடம் உடைந்துவிட்டதால் தற்பொழுது பஸ்நிலையத்தில் பஸ் வந்து திரும்பிச் செல்வது சிரமமாக உள்ளது. இதுபற்றி கோயில் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## “ஆசை காட்டி வாக்கு வேட்டை”

வேலணை, ஞாயிறு

“சீமெந்து தருகிறேம், ஓடு தருகிறேம், கோவிலுக்கு நூல்நிலையத்துக்குப் பணம் தருகிறேம் என்று ஆசை வார்த்தை கூறி, வாக்கு வேட்டையாடியவர்கள் தேர்தல் நெருங்கியதும் மக்கள் முன்னே பணப்பையுடன் வருகிருர்கள். இவர்கள் பல காரணங்களால் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமுள்ள மக்களிடையே தான் தங்கள் கைவரிசையைக் காட்டுகிருள். இந்தத் தீட்டவிரோ சமூகத் துரோகச் செயல்களில் ஈடுபடுபவர்களை விரட்டியடிக்க வேண்டும்” என நாரந்தனை ஈச்சங்காடு தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி நிறுவற் கூட்டத்தில் கிளிநொச்சி எம் பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினுர்.

திரு. அருமைநாதர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சந்...யோவும் வேறு பலரும் பேசினர்.

## ...இலவசமாகக் கொடுப்பார்களா?’

— டட்லி

ஹொறவபொத்தானை, திங்கள்

‘கூட்டணியினர் பங்கீட்டரிசி இரண்டு கொத்தையும் இலவசமாகக் கொடுப்பார்களா?

இந்தக்கேள்வியை பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா ஹொறவப்பொத்தானை தொகுதியில் புதிய ஆஸ்பத்திரி ஒன்றைத் திறந்து வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் எதிர்கட்சியினர் இரண்டுபடி அரிசி கொடுப்பதுபற்றி பேசுகிருர்கள். இரண்டுபடிஅரிசியைக் கொடுத்தால் விவசாயிகளுக்குப் பெரும் திங்கிழைத்தவர்களாவோம். இன்று மிக மிக வறியவர்களாகாவிருந்த விவசாயிகள் அரசாங்கத்தின் உணவு உற்பத்திப் பெருக்கத்தினுல் தங்கள் வறுமையைப் போக்கியுள்ளார்கள், முன்னெப்பொழுதாவது பங்கீட்டரிசி இலவசமாகக் கொடுக்கப்பட்டதா?

செனட்டிலும், ஆட்சிமன்றத்திலும்மகாவலி மசோதா விவாதத்திற்கெடுத்து நிறைவேற்றப்பட்டபோது வாக்கெடுப்பு நேரத்தில் எதிர்க்கட்சியினர் வெளியில் ஓடிவிட்டனர். இதனுல் ஏகமனதாக மசோதா நிறைவேறியது. எதிர்க்கட்சியினர் நடந்து கொண்டமுறைசரியானதா? எதிர்ப்பை மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பதின் மூலம் காட்டியிருக்கலாமல்லவா?

மகாவலிகங்கை

## திட்டத்தைஎதிர்ப்பவர்கள் மனநோயாளர்கள்

— பிலிப்

கலகெதர, திங்கள்

தேசிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து மக்கள் நல்ல முன்னேற்றமடைந்து நாட்டில் தலைநிமிர்ந்து நடக்கிருர்கள். எதிர்க்கட்சியினரும் அவர்களது ஆதரவாளர்களிற் சிலரும் மகாவலி கங்கைத் திட்டத்தை எதிர்கிருர்கள். இத்திட்டத்தை எதிர்ப்பவர்களை அங்கொடையிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டும்.

கலகெதரவில் நடைபெற்ற அவிசாவலைத் தொகுதி ஐக்கிய முன்னணி வாலிபர் மகாநாட்டில் உரையாற்றியகைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் தேசிய அரசாங்கம் பெருமுயற்சி செய்து பலஉணவுப்பொருள்களை உற்பத்திசெய்துள்ளது. இதனுல் மக்கள் தம்நாட்டின் உற்பத்தியை மகிழ்ச்சியோடு அனுபவிக்கிருர்கள். தேசிய அரசாங்கம் திரும்பவும் பதவிக்கு வருமானுல் 1975-ம் ஆண்டில் நாடு பொன்கொழிக்கும் பூமியாகிவிடும் எமது நாட்டுப் பொருள்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் எனக் கூறினுர்.

## தட்டுப்பாடு

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையிலும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையிலும் மருந்து கட்டும் துணி, பிளாஸ்டர் போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த வைத்திய சாலைகளுக்கு இந்த நிதி ஆண்டுக்கான மருந்து வகைகள் இதுவரை வந்துசேரவில்லை என்று தெரிய வருகிறது.

## ‘கரம்பொன் இந்துமாமன்றம்’

ஊர்காவற்றுறை, திங்கள்

கரம்பொன் இந்துமாமன்றம் என்ற பெயருடைய சமய அபிவிருத்தி, கலாச்சார ஸ்தாபனம் ஒன்றை அப்பகுதிமக்கள் அங்குரார்ப்பணம் செய்துள்ளார்.

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் பின்வருவோர் மன்ற நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பாதுகாவலர்: டாக்டர் திரு. வி. நடராசா, தலைவர்: திரு. வி. ஆறுமுகராசா, இணைக்காரியதரிசிகள் பண்டிதர் திரு. சோ. தியாகராசபிள்ளை, திரு. ம. அருணசலம், தனுதிகாரி திரு. இ. மாணிக்கம்

நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

...தமிழரசு வாலிப முன்னணியினுல் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்தில் தம் கட்சிக்கொள்கைகளை விளக்கிப் பேசினர்

### திறப்பு விழா

பச்சிலைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த ஆளியவளைக் கிராமத்தில் புதிய உப-தபாற்கந்தோர் அண்மையில் பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சு துரைரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது. வடமாநில அஞ்சல் திணைக்கள அத்தியட்சகர், அஞ்சல்திணைக்கள பரிசோதகர், பளை தபால் நிலைய அதிபர், செம்பியன் பற்று உபதபால் நிலைய அதிபர் ஆகியோரும் விழாவில் பங்குபற்றி உரையாற்றினர்.

### வால் வெள்ளி

கடந்த சில நாட்களாக கீழ்த்திசையில் அடிவானத்தில் ஒருபாக நீளமான வால்வெள்ளி காணப்படுகின்றது. வால் மிக பிரகாசமாயிருக்கிறது. இதற்கு முன் வால்வெள்ளி காணப்பட்ட வருடங்களில் நாட்டில் கலவரமும் குழப்பமும் அமைதியின்மையும் ஏற்பட்டதாகவும் இவ்வருடமும் வால்வெள்ளி காணப்படுவதால் மேற்குறித்த சம்பவங்கள் ஏற்படக் கூடுமென பெரியோர் பேசிக்கொள்கின்றனர்

0 0 0

### 82 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் எண்பத்திரண்டு மாணவர்களுக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் மாத்திரமே கல்வி போதித்து வருகிருர். மேற்குறித்த பாடசாலைக்கு நிரந்தர தலைமை ஆசிரியர் ஒருவரையும் ஆங்கில உதவி ஆசிரியர் ஒருவரையும் நியமிக்குமாறு ஆட்சிமன்ற உறுப்பினரையும் கல்விப் பகுதி மேலதிகாரிகளையும் பெற்ருேர் ஆசிரியர் சங்கமும் பொதுமக்களும் பலமுறை வேண்டியும் பலன் கிடைக்கவில்லை. மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருப்பது குறித்து பெற்ருேர் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

0 0 0

### படுகாயமுற்ருர்

பச்சிலைப்பள்ளி விளையாட்டுப் போதனுசிரியரும் புலோப்பளைக் கிராமசேவையாளரும் பளை-புலோப்பளை வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது வீதிக்குக் குறுக்கே வந்த ஆடு ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி பலயார்

அரசியல் கட்சிகள் மக்களைக் கவரக்கூடியதாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தை அமைத்துவிட்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட எதையும் செயல்படுத்தாது விடுகின்றன. இந்த முறையில் தமிழர் சுயாட்சிக்கழக தேர்தல் விஞ்ஞாபனம் அமையாது” என கழகத்தலைவர் திரு வி நவரத்தினம் எம் பி குறிப்பிட்டார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற த சு கழகத்தின் செயற்குழுக்கூட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் பொறுப்பு தலைவர் நவரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தவிஞ்ஞாபனம் அடுத்த செயற்குழுவில் பரிசிலனைக்கு விடப்பட்டு வெளியிடப்படும்.

வட்டுக்கோட்டை, உடுவில், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் அபேட்சகர்களை நியமிப்பது பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவிருந்தபோதிலும், வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு அபேட்சகர் நியமனம்கோரி வந்த விண்ணப்பங்கள் மட்டும் ஆராயப்பட்டன. இத்தொகுதி அபேட்சகரின் விண்ணப்பம் கழகத்தின் அபேட்சகர் நியமனக்குழுவிடம் பரிசிலனைக்குவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் சம்பந்தப்பட்டவிஷயங்களையிட்டும், பிரசாரஒழுங்குகளையிட்டும் ஆராய்ந்த இச் செயற்குழு அடுத்தவாரம் அபேட்சகர்களைக் கொண்ட ஆலோசனைக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானித்தது.

புதியமுறையிலானவாலிப முன்னணிஒன்றை அமைத்து இயக்கப்பயிற்சிகளைக் கொடுக்கவேண்டுமென்ற திட்டம் பற்றி அடுத்தகூட்டத்தில் ஆராய்வதெனவும். அடுத்த செயற்குழு ஏப்ரல்மாதமுற்பகுதியில் கூடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 25 புதிய உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

## பிரசாரக் கூட்டம்

கிளிநொச்சி, திங்

அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியை ஆதரிக்குமுகமாக ஒரு பிரசாரக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை திருநகர் கிராமமுன்னேற்றச்சங்க மைதானத்தில் நடைபெற்றது. திருவாளர்கள் எஸ். ஸ்ரீதரன், வி. குமாரசாமி, சி மோதிலால் நேரு ஆகியோர் உட்பட வேறுபலரும் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எதை உண்போம், எதைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவை உங்களுக்கு வேண்டுமென பிதா அறிந்திருக்கிறார். — இயேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu N. tional Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 11-ந் திகதி (24-3-70)


## கொழும்பு மகாநாடு

கொழும்பிலே நேற்றும் இன்றும் நடைபெறும் கூட்டுச்சேராத எட்டு ஆசிய நாடுகளின் மகாநாட்டினால் எவ்வித பயனும் ஏற்படாதென்றும், திடீர் திடீரென மாறிவரும் சர்வதேச நிலையிலே, கூட்டுச்சேராதநாடுகள் என்று கூறுவதற்கே அர்த்தமில்லையென்றும் சிலர் கருதலாம்.

இம்மகாநாட்டிலே கலந்துகொள்வதாகக் கூறியிருந்த பர்மாவும், ஆப்கானிஸ்தானும் பின்னர் மனம் மாறி இதில் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்துவிட்டனவாம். ஏன்? இதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான்வேண்டும். சில வல்லரசுகளுக்குப் பயந்தே இவை மனம் மாறினவா? அல்லது வேறு என்ன காரணம்?

இது எப்படியாயினும், ஆசியாவின் ஸ்விட்ஸர்லந்து என்று கூறப்படும் இலங்கைக்கு அரசியல் விரோதிகள் யாருமில்லை. வல்லரசுகள் உள்ளிட்டு எல்லா நாடுகளுடனும் நாம் நட்புறவுகொண்டிருக்கிறோம். உலகிலே அமைதியையும் ஒத்துழைப்பையும் பலப்படுத்தவேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் நடைபெறும் இவ்வித மகாநாட்டினால் விசேஷ நன்மை ஏற்பட முடியாவிடினும் கூட தீமை எதுவும் ஏற்படாதென்றே கொள்ளலாம். இதற்கு மாறாக, மாறிவரும் உலகநிலையிலே, பல நாடுகளும் சிறப்பாக புதிதாக ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலைஅடைந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அடிக்கடி கலந்து பேசுவது வரவேற்கத்தக்கது. புதிதாகக் கிடைத்துள்ள அவர்களது அரசியல் சுதந்திரத்துக்கும் பொருளாதார சுதந்திரத்துக்கும் புதிய புதிய ஆபத்துக்கள் ஏற்பட்டு வருவதைப் பார்க்கின்றோம், நம் இலங்கையைத் தவிர மற்ற ஆசிய நாடுகளிலே அரசியல் அமைதியில்லை. வல்லரசுகளின் விஷமங்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும்...

பெற்ற சுதந்திரத்தை இழந்துவிடக்கூடிய ஆபத்துக்கள் அதிகரித்துவருகின்றனவென்பது கண்கூடு. இந்நிலையில், இந்நாடுகள் கூடி, இப்புதிய ஆபத்துக்களிலிருந்து தங்களை எவ்விதம்பாதுகாத்துக்கொள்ளலாமென்று கலந்து யோசிப்பதுடன் அதற்குக் கூடுமான நடவடிக்கைகளை எடுப்பதும் எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை.

கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் இராணுவ பாதுகாப்பைப் பற்றிய பேச்சு இராதென்றும், ஒரு திட்டவட்டமான நிகழ்ச்சிநிரலும் தயாரிக்கப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது. பல பொதுவிஷயங்களைப் பற்றியும் கலந்து பேசக்கூடிய ஒரு கருத்தரங்கமாகவே இம் மகாநாடு இருக்குமாம், பிறகு அடுத்த மாதத்திலே ஆபிரிக்காவைச் சேர்ந்த டான்ஸேனியாவில் நடைபெற இருக்கும் ஆசிய - ஆபிரிக்க (கூட்டுசேரா) மகாநாட்டுக்கு இது முதல்படியாக இருக்குமாம். புதிதாக விடுதலையடைந்த ஆசிய நாடுகளில் சில இம் மகாநாட்டிலே கலந்துகொள்ள முடியாமற்போனது பெரிய துரதிருஷ்டம். இது கூட்டுச்சேராக் கொள்கையையே பலவீனப்படுத்துவதாகும். இக்குறையை நீக்கி, புதிதாக விடுதலை அடைந்த எல்லா ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் எவ்வளவுக்கெவ்வளவு ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் காரியம் செய்து, வல்லரசுகளின் தயவின்றி வாழமுடிகிறதோ, அதைப் பொறுத்தே, அந் நாடுகளின் எதிர்கால சுபீட்சமும் பாதுகாப்புமிருக்கும். இந் நோக்கத்துக்கான முறையில் கொழும்பிலே நடைபெறும் இம் மகாநாட்டுப் பேச்சுக்கள் எதுவும் உதவுவதாயின், அந்த மட்டில் அவை வரவேற்கத்தக்கவையாவதுடன், இம் மகாநாட்டின் வெற்றியையும் இது குறிப்பதாக...

# ஜனநாயக மனோபாவத்தை வளர்க்க சகிப்புத்தன்மை வேண்டும்

**'ஜனநாயகஅமைப்பில் பொதுஜனஅபிப்பிராயம்தான் சமூகத்தைத் தூய்மையாக வைத்திருக்கும். அதேசமயத்தில் பிடிவாதமின்றி மற்றக்கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும். நம் மனத்திற்குச் சரி என்று தோன்றுவதை அஞ்சாமல் சொல்லவும் செய்யவும் துணியவேண்டும்.**

நாம் அவசியமான ஜனநாயக மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள விரும்பினால் நம்மிடம் சகிப்புத்தன்மை இருக்கவேண்டும். சகிப்பின்மை நமக்கு நம் கட்சியிலேயே நம்பிக்கையில்லாததைத்தான் காட்டும்.

எந்தவகைக் கருத்தினரும் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவரும் தாங்கள் சொல்வதே சரி என்று பிடிவாதம் பிடிக்கக்கூடாது என்று நான் திரும்பத்திரும்ப சொல்லியிருக்கிறேன். நாம் எல்லோருமே பிழைகள் செய்யக்கூடியவர்களாகையால் நம் கருத்துக்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளவேண்டி வருகிறது. இதைப்போன்ற பெரியநாட்டில் உண்மையாகவும், நாணயமாகவும்கருத்துக்கள் கொண்டுள்ள எல்லோருக்கும் இடம் இருக்கவேண்டும். ஆகவேகுறைந்தபட்சம் நம் விஷயத்திலும், பிறர்விஷயத்திலும் நாம் செய்யவேண்டுவது எதிராளியின் கருத்தைப்புரிந்துகொள்வதும் அதை ஏற்கமுடியாவிட்டாலும்நம்கருத்தைப் பிறர் மதிக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதைப்போல பிறர் கருத்தை நாம் மதிப்பதுமாகும். செம்மையான பொதுவாழ்வுக்கு இன்றியமையாத சாதனங்களில் இது ஒன்றாகையால் சுயராஜ்யத்திற்கு நமக்குள்ள தகுதியையும் இதுவே காட்டும். நாம் தாராளபுத்தியும், சகிப்புத்தன்மையும், இல்லாதிருந்தால் நம்மால் நம்மிடையே எழும் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியாதாகையால் எப்பொழுதும் மூன்றும் மனிதர் தீர்ப்புக்கு அதாவது அந்நியர் ஆதிக்கத்திற்கு அடங்கியே இருக்கவேண்டியிருக்கும்.

### பொதுஜன அபிப்பிராயம்

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நடக்கும் ஆட்சி பொதுஜன அபிப்பிராயத்தை மதியாமல் தன்இஷ்டத்திற்குத் திருப்பும் கருத்துடன் எதையும் செய்யக்கூடாது. பொதுஜனஅபிப்பிராயத்தை மீறி நடக்குமானால் அதுவே அழிவுற்றுவிடும். கட்டுப்பாட்டுடனும் அறிவுடனும் நடக்கும் ஜனநாயகத்திற்கு ஈடாகஉலகில் எதுவும் இல்லை. பாரபட்சம்...

நாம் எதிராளி சொல்லுவதையும் காதில் வாங்கிக்கொள்ளச் சித்தமாக இல்லாவிட்டால் ஜனநாயகம் வளர்ந்து பருவம்எய்துவதே சாத்தியமல்ல. நாம் எதிராளி சொல்வதைக் கேட்க மறுக்கும்போதும், ஒருவேளை கேட்டாலும் அவர்கள் சொல்வதைக் கேலிசெய்கையிலும் நம் நடவடிக்கைகளில் நியாயம் புகாது தடுக்கிறோம். எதிராளியின் பேச்சைச் சகிக்காமலோ பொறுக்காமலோ பழகிவிடுகையில் நம்மால் உண்மையை அறியமுடியாமல் போம். இயற்கையில நமக்குள்ள ஆற்றலின் துணையால் செயல்படுகையிலும் நமக்கு சரி என்று தோன்றுவதை அஞ்சாமல் சொல்லவும் செய்யவும் துணியவேண்டும். ஆனால் நாம் உண்மையென்று நம்பியிருந்தது அவ்வாறில்லைஎன்றுதெரிந்ததும் நம்கருத்தை மாற்றிக்கொள்

### மகாத்மா காந்தி

ளவும், முன்பு நினைத்ததைத் தவறு என்று தயங்காது ஒப்புக்கொள்ளவும் வேண்டும். இவ்வாறு செய்வதால் நம்மிடமுள்ள உண்மை மேலும் உறுதியாவதோடு அதிலிருந்து குறைகளும் நீக்கப்பெறும்:

பலவீனர்கள், சக்தியில்லாதவர்கள் ஆகியோரின் போலி அகிம்சையைப்போல் தீங்கு விளைவிப்பது வேறு ஒன்றுமில்லை. நமக்குள் தேவையான அகிம்சை மட்டுமிருந்தால் நம் பொதுவாழ்வில் மிகவும் அதிகமாக சகிப்புத் தன்மை காணப்படும். அப்போது நாட்டில் எவ்வளவு விதமான அபிப்பிராயங்கள் உள்ளனவோ அவ்வளவு கட்சிகள் தோன்றுவதற்கும் இடமிருக்கும். கருத்து வேற்றுமைகளிலிருந்து மக்களின் [illegible] தக்க [illegible] ன்மை வெளியாகுமே தவிர [illegible]சி பூசல்களுக்கும் திரி...

பொதுஜன அபிப்பிராயம் உருவாக்கப் படாதிருக்கையில் சட்டங்களை நிறைவேற்றுவதால் ஒரு நன்மையுமில்லை, பொதுஜன அபிப்பிராயத்தை விரைவில் தோற்றுவிப்பதற்கு உள்ள வழிஒத்துழையாமைஒன்றே. சுதந்திரமான ராஜ்யத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் எப்போதும் மக்களின் பெரும்பாலோரின் கருத்தைப் பிரதிபலிப்பவையாக இருக்கும். பொதுஜன அபிப்பிராயம் உருவாகாதிருக்கையில் சட்டம் நிறைவேற்றுவது தலைவர்களுக்கு மக்கள் தொண்டில் ஈடுபாடு இல்லாததையே காட்டும். இதனால் தான் எப்பொழுதும் மக்கள் தொண்டை நம்பித்தான் நான் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கிறேன்.

## "பாடசாலைகளின் தலையாய கடமை"

நாவலப்பிட்டி, திங்கள்

'ஒரு பாடசாலையின் திறமை பண்புள்ள மாணவர்களை உருவாக்குவதிலேயே தங்கியுள்ளது இன்றைய சிறுவர்களிலேயே நாட்டின் வருங்காலம் தங்கியுள்ளது. இத்தகைய சிறுவர்களுக்குகடவையுணர்ச்சியையும் ஒழுக்கத்தையும் அளிப்பது பாடசாலைகளின் தலையாயகடமையாகும்'

ஆட்சிமன்ற அங்கத்தவர் இரு. வே. அண்ணாமலை புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலய உடற்பயிற்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் இப்பாடசாலை அதிபர் அபிவிருத்திவேலைகள் பலவற்றைச் செய்துள்ளார். பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு கொடுத்து பணியாற்ற வேண்டும் எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் மேற்படி வித்தியாலய அதிபர் திரு. டி. வி. மாரிமுத்துவும் உரை நிகழ்த்தினார்.

## விவேகானந்த சபையின் ஏகோபித்த எதிர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சமீபத்தில் சமய பாடப் பரீட்சை பாடவிதானத்தில் செய்த மாறுதல்களை கொழும்பு விவேகானந்தசபை நிர்வாகக் குழுவினர் எதிர்த்து இதில் தக்க திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை திரு கே ஆள்வாப்பிள்ளையின் தலைமையில் கூடி ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

காலஞ்சென்ற இந்து போர்ட திரு. எஸ். இராஜரத்தினம், திரு. பட்டக்கண்ணு குமாரசாமி இவர்கள் மரணத்துக்காக அநுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியதுடன் கொழும்பிலே திரு. இராஜரத்தினத்தின் ஞாபகமாக ஒரு கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்தனர்.

# நாட்டிலும் நகரிலும்

வீடுகள் தோறும் கிருமி மருந்து அடிக்கும் ஒரு சுகாதாரப் பகுதி இன்ஸ்பெக்டருக்கும் ஒரு குடியானவனுக்குமிடையில் வாக்குவாதம் நடப்பதை நானும் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

நினைத்துக் கொண்டிருந்த மூட்டைப் பூச்சி மறுபடியும் எப்படி வந்தது? வேறு சிலரிடமும் இந்த அனுபவத்தைப் பற்றி கேள்விப்பட்டேன்.

பூச்சிகளைக் கொல்வதற்காக அடிக்கப்படும் மருந்து...

# ஜயாறன் எழுதுவது

இந்தியாவிலே இரண்டொரு மாதம் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இலங்கை திரும்பிய ஒரு பிரபல (அரசியல் பற்றில்லாத) இலங்கையரை அங்குள்ள நிலைமைபற்றிக் கேட்டேன்.

தமிழ்நாடு, மைசூர் இவ்விரு ராஜ்யங்களையும் தவிர மற்ற இடங்களில் அரசியல் அமைதியில்லை என்றுசொன்னார். மைசூரில்கூட தமிழருக்கு எதிராக துவேஷக் கிளர்ச்சிகள் நடக்கின்றன. 'தமிழ்பாட்டுப் பாடாதே' என்று கோவிந்தராஜன் கச்சேரியை சில மொழித் துவேஷிகள் கலைத்துவிட்டார்களாம். அப்படியான எவ்வித அசம்பாவிதங்களுமின்றி, உலகத்தார் மெச்சும்படி கலைஞர் கருணாநிதி ஆட்சி நடத்துவது போற்றத்தக்கது.

அண்ணாவுக்குப்பின் என்ன ஆகுமோ என்று பயந்தவர்களும் இப்போது நிம்மதியடைந்துள்ளனர். ம. பொ. சி. அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறியபடி அவ்வப்போது தமிழகத்துக்குத் தகுந்த தலைவர்களை இறைவன் தந்து கொண்டிருக்கின்றார். தமிழ்நாட்டுக்குத் திருஷ்டிபடாமல் இருக்க வேண்டும்.

0 0 0

இப்போது உண்மையான ஜனநாயக ஆட்சி எங்கும் நடைபெறவில்லை என்றும் புதிதாக விடுதலை அடைந்த நாடுகளில் ஜனநாயக ஆட்சி நடப்பதாகக் கூறுமிடங்களிலும் அமைதியில்லாமல் மக்கள் சங்கடப்படுவதாகவும், ஆட்சி முறையை அடியோடு மாற்ற வேண்டியது அவசியமென்றும் கூறினார்.

முற்காலத்தில் இருந்தது போல மன்னர் ஆட்சி ஏற்படுவதாயின் அது நல்லதா? என்று கேட்டேன். யாரை மன்னராக நியமிப்பது? பரம்பரை வாரிஸாக மன்னர்கள் பதவிக்கு வருவதை ஒப்புக் கொள்ள முடியாதென்றும் மகாத்மாகாந்தி போன்ற இயற்கைத் தலைவர்களின் தலைமையிலேயே அரசாங்கம் நடைபெற வேண்டுமென்றும் அதற்கு 'அரிஸ்டாகிரஸி' என்று கூறலாமென்றும் சொன்னார். அந்த உலகம் சுற்றிய தமிழர்.

அகிம்சாமூர்த்தியான மகாத்மாவையே சுட்டுக்கொன்றுவிட்டார்கள். இனி அவ்வித தலைவர்களுக்கு...

வாக்குகளால் அவர் ஜனாதிபதியாவதாயின் தலைமைப் பதவி ஏற்றதுமே அவருக்கு பல விரோதிகள் ஏற்பட்டுவிடுகிறார்கள். அவருக்கு மாறாக வாக்குச் செய்தவருக்கு அவர்மீது எப்படி நம்பிக்கையும் விசுவாசமுமிருக்கும். தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபின் அவர்மீது வழக்கும் நடைபெறுவது, அப்பெரிய பதவியின் மதிப்பையும் கௌரவத்தையும் குறைப்பதாகாதா?

இன்று இந்திய அரசியல் நிலை ஸ்திரமற்று இருப்பின் அதற்குக் காரணம் அங்குள்ள அரசியல் சட்டத்திலே ஒற்றுமைப்படுத்தும் சக்தி எதுவுமில்லாதிருப்பது தான். அந்த அரசியல் திட்டம்பற்றி அடியோடு பரிசீலனை செய்து சென்ற கால அனுபவங்களுக்கேற்ப முக்கிய மாற்றங்களை செய்ய வேண்டாமா?

இரண்டொரு ராஜ்யங்களிலாவது மன்னர் ஆட்சியை பரீட்சார்த்தமாக ஏற்படுத்திப் பார்க்கலாமென்கிறார் ஓர் அன்பர். ஆனால் இது நடக்கக்கூடியதா?

0 0 0

சென்ற சில நாட்களாக அதிகாலை தென்கிழக்கு திசையில் ஒரு வால்நட்சத்திரம்தெரிவதாயும் என்னை பார்க்கும்படியும் ஓர் அன்பர் நேற்று அதிகாலை டெலிபோன் செய்தார். வானத்தைப் பார்த்தேன். வால் நட்சத்திரம் நன்கு தெரிந்தது மேற்கு வானத்திலே அதேசமயம் பூரணசந்திரன் ஜோதிமயமாகப் பிரகாசித்தான். வானத்தில் காணும் இந்த அதிசயக் காட்சிகளைப் பார்க்கும்போது நமது அறியாமையை நன்கு உணரக்கூடியதாகவுள்ளது. இந்த வால் நட்சத்திரத்தால் பல முக்கிய மாறுதல்கள் ஏற்படலாமென்கிறார் நண்பர். மாறுதல் அவசியம்தான் ஆனால் தலைவலி போய்திருகுவலியாகாமல் இறைவன் தான் காக்க வேண்டும்.

0 0 0

செறுவினிற் செழுங்கமலமோங்குதென் புகலூர் மேவிய செல்வனை, நறவம் பூம்பொழில் நாவலூரான் வனப்பகையப்பன் சடையன்றன், சிறுவன் வன்றொண்டனூரன் பாடிய பாடல்பத்திவை வல்லவர், அறவனாரடி சென்று சேர்வதற்கு யாதுமையுறவில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துக்கள் ஏற்பட்டு வருவதைப் பார்க்கின்றோம், நம் இலங்கையைத் தவிர மற்ற ஆசிய நாடுகளிலே அரசியல் அமைதியில்லை. வல்லரசுகளின் விஷமங்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் நடைபெற்று, நடைபெறும் இம் மகாநாட்டுப் பேச்சுக்கள் எதுவும் உதவுவதாயின், அந்த மட்டில் அவை வரவேற்கத் தக்கவையாவதுடன், இம் மகாநாட்டின் வெற்றியையும் இது குறிப்பதாக இருக்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## அச்சுவேலி குடியேற்ற வீடுகள்: எவ்வித நடவடிக்கையுமில்லை

அச்சுவேலிசெல்வநாயகபுர குடியிருப்பு வாசிகளாகிய நாம் வீடுகளில் தொடர்ந்திருக்க முடியாத நிலையிலுள்ளோம். குடியிருப்பு வாசிகளுக்கென வெட்டித் தரப்பட்ட கிணறுகளில் போதிய நீர் இன்றி இருப்பதே எமது கஷ்டநிலைக்கு காரணமாகும்.

மேலும் இக்கிணறுகள் அதிக ஆழமாய் இருப்பதனுல் கயிற்றுக் கப்பிமூலம் தண்ணீர் எடுப்பது அதிக சிரமத்தை ஏற்படுத்துகிறது. இதனுல் துலாமூலம் தண்ணீர் எடுப்பதற்கு வசதி செய்துதருமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

தற்போது இக்கிணறுகளில் போதியளவு தண்ணீர் பெற முடியாமல் இருக்கிறது. இதனுல் கடும் வரட்சிகாலங்களில் குடிக்கவோ குளிக்கவோ முடியாத அவலநிலை ஏற்படுகிறது. இவ் வீடுகளின் கூரைகள் நல்ல நிலையில் இல்லாததே நாம் தொடர்ந்து இருக்கமுடியாததற்கு மற்றெரு காரணமாகும்.

இதுபற்றி அண்மையில் இக்குடியேற்றத் திட்டத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர் பிரேமதாசா அவர்களிடம் குடியிருப்பு வாசிகளும் எமது இளைஞர் முன்னேற்றக்கழகமும்முறையிட்டிருந்தும் இதுவரைஎதுவித நடவடிகையும் மேற்கொள்ளப்படவில்லை.

த. நவரத்தினம்,
இளைஞர் முன்னேற்றக் கழகம், வசாவிளான்.

## சாரணர் முன்மாதிரி

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மையில் யாழ்ப்பாணம் பொலிசார் நடத்திய பொலிஸ்தின விழாவின்போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரணர்கள் ரூபா 101-00 சேகரித்து 'ஈழநாடு' பாலைதீவு படகுவிபத்து நிவாரணநிதிக்கு உதவியிருக்கிறர்கள்

யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. சி. சுந்தரலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இந்தப் பணத்தை சாரணர்கள் சேகரித்து வழங்கியிருக்கிறர்கள்.

## 'பரமானந்தராசா ஸரேடியம்'

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிராமசபையின் 14-ம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுவரும் கோப்பாம் பகுதி பொதுவிளையாட்டு மைதானத்துக்கு 'பரமானந்தராசா ஸ்ரேடியம்' எனப் பெயர் சூட்டுவதென மேற்படி கி. சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி மைதானத்துக்கென ஸ்தலஸ்தாபன அமைச்சு 5000 ரூபாவும் விளையாட்டுஅமைச்சு 4,000ரூபாவும், கிராமசபைத்தலைவர் திரு. பரமானந்தராசா 2500 ரூபாவும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

மைதான அமைப்புவேலைகள் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

## கையிருப்பில் உணவுப் பொருள்

கோட்டை திங்கள்

சிங்கள—தமிழ் புதுவருடக் கொண்டாட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்கள், துணிவகைகள் ஆகியன பெருமளவில் கையிருப்பில் உள்ளன என கூட்டுறவு மொத்த விற்பனவு ஆணையாளர் தெரிவித்துள்ளார். இத்துடன் லங்கா சதுசலாவும் புதுவருடத்தையொட்டி 7 கோடி யார் ஜவுளி வகைகளை இறககுமதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கூடாது. பொதுஜன அபிப்பிராயத்தை மீறி நடக்குமானுல் அதுவே அழிவுற்றுவிடும். கட்டுப்பாட்டுடனும் அறிவுடனும் நடக்கும் ஜனநாயகத்திற்கு ஈடாக உலகில் எதுவும் இல்லை. பாரபட்சம் உள்ளதும், அறிவில்லாததும் குருட்டு நம்பிக்கைகள் கொண்டதுமான ஜனநாயகம் குழப்பத்தில் சிக்கி அவதிப்படுவதோடு, இறுதியில் அழிந்துபோகும்.

...வு கட்சிகள் தோன்றுவதற்கும் இடமிருக்கும். கருத்து வேற்றுமைகளிலிருந்து மக்களின் போற்றத்தக்க சுதந்திர மனப்பான்மை வெளியாகுமே தவிர ...சி பூசல்களுக்கும் திரிசமன்களுக்கும் இடம் ஏற்படாது. சுதந்திர மனப்பான்மை வாழ்க்கையின் ஒரு நியதியாகையால், கட்சிப் பூசல்களும் சூழ்ச்சிகளும் உள்ள இடத்தில் அதற்கு இடமில்லை.

# செய்திச் சுருக்கம்

### கட்டுப்பணம்

வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம், சாவகச்சேரித் தொகுதி உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் ஆகியோரின் தேர்தல் கட்டுப்பணத்தை முறையே அட்டன் மாவட்ட தமிழரசுக் கட்சிக்கிளையும், குகலை மாவட்ட தமிழரசுக் கட்சிக்கிளையும் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

### ஸ்ரீமா குற்றச்சாட்டு

1965ம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சி செய்த இரு முக்கிய வாக்குறுதிகள் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதும், வாழ்க்கைச் செலவுப் புள்ளியைத் தீர்த்து வைப்பதுமேயாகும். அன்று வேலையற்றேரின் எண்ணிக்கை 150,000 ஆகும். இன்று இது 7லட்சத்துக்கும் கூடுதலானதாகும் இவ்வாறு அத்தனகலை கட்சிப்பிரசாரக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயகா குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

1965ல் வாழ்க்கைச் செலவுப் புள்ளி1.12 இன்று 1.37 ஆகும். ஒரு பத்திரிகையைத் தணிக்கை செய்த ஒரே ஒரு பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா எனவும் குறிப்பிட்டார்.

### 90 வது மக்கள் வங்கிக் கிளை

மக்கள் வங்கியின் 90வது கிளை கந்தளாயில் திறந்து வைக்கப்பட்டது. மக்கள் வங்கித் தலைவர் திரு ரி. பி. பாணபொக்கே இதனைத் திறந்து வைத்தார்.

### முதலிடம் பெற்றது

நேற்று முன்தினம் கொழும்பு விஹாரமகாதேவிபூங்காவனத்தில் நடைபெற்ற வருடாந்த குழந்தைகள் பாதுகாப்பு வீதிப்போக்குவரத்துப் போட்டியில் பங்குபற்றிய பாடசாலைகளில் பம்பலப்பிட்டி விசாகா வித்தியாலயம் முதல் ஸ்தானத்தைப் பெற்றது.

### மகாவலிக் கரையில் பிரேதம்

கிண்ணியா வாசியான ஏழுபிள்ளைகளுக்குத் தந்தையான (41)ஒருவர் மகாவலி கங்கைக் கரையோரத்தில் பிரேதமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

### 19கலைஞர்கள் பங்குபற்றுவர்

டோக்கியோவில் நடைபெறவிருக்கும் எக்ஸ்போ-70 கண்காட்சியில் இலங்கையைச் சேர்ந்த 19 கலைஞர்கள் பங்குபற்ற இருக்கின்றனர். கண்டிய கடனம், சிங்களக் கிராமியப்பாடல்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகளை நடாத்த உள்ளனர்.

## பகல் விடுதி

பள்ளிமுனை, திங்கள்

உழைக்கும் தாய்மார் தமது ஊதியத்தை பெருக்குவதற்கு ஐந்துவயதுக்குட்பட்ட குழந்தைகள் இடையூறக இருப்பதனுல் சமூக சேவை இலாகா தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் 'பாலன் பகல் விடுதிச் சாலை'யை அமைத்திருப்பது எல்லோராலும் விரும்பத் தக்கது. இவ்வாறு பள்ளிமுனை மாதர் சனசமூக நிலையத் தலைவி திருமதி திரேசம்மா பிகிரேடா தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் மன்னர் பட்டினசபைத் தலைவர் ஜனுப் ரஹீம், திருவாளர்கள் சிவானந்தன், புண்ணிய புவிராசசிங்கி, சின்னப்பு பிகிரேடா, செல்வி அகஸ்ரா ஆகியோர் கலந்துரையாற்றினர்.

மருந்து அடிக்கும் ...சுகாதாரப் பகுதி இன்ஸ்பெக்டருக்கும் ஒரு குடியானவனுக்குமிடையில் வாக்குவாதம் நடப்பதை நானும் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

நெருப்புக்காய்ச்சல், மலேரியா முதலிய நோய்கள் பரவாமல் தடுப்பதற்காகவே அரசாங்கம் மருந்தடிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறதென்றும், பொதுமக்களின் நன்மையைக் கருதியே இது நடக்கிறதென்றும் இன்ஸ்பெக்டர் எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லிப் பார்த்தார். குடியானவன் அசையவில்லை. 'மற்ற வீடுகளுக்குவேண்டுமென்றல் போய் நல்லாய் அடியுங்கள். என் வீட்டுக்கு மட்டும் மருந்து வேண்டாம், நோய்வந்தால் பிறகுபார்த்துக் கொள்ளலாம் என்று ஒரேயடியாக மறுத்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் போன பிறகு 'மருந்து அடித்துக் கொள்ள ஏன் மறுத்து விட்டாய்' என்று குடியானவனிடம் கேட்டேன், 'ஐயா, உந்த மருந்து அடித்தவுடனே. மூட்டைப் பூச்சிகள் மொசுமொசுவென்று புழுத்துப் போகிறது' என்று அவன் சொன்னுன்.

அவனுடைய பதில் எனக்கு சிறிதும் ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஏனென்றல் இதே குறைபாட்டை நான் பலர் வாய் மூலம் கேள்விப்பட்ருக்கிறேன். ஏன், என்னுடைய சொந்த அனுபவமே அதுதான்!

எங்கள் வீட்டுக்கு எப்படியோ மூட்டை வந்துசேர்ந்துவிட்டது. அநேகமாக சினிமா தியேட்டர் வழியாகத்தான் வந்திருக்க வேண்டும் ஏனென்றல் மூட்டைகளை ஊரில் பரப்பும் பிரதானமான சாதனம் தியேட்டர் தான். எவ்வளவோ சிரமப்பட்டுமூட்டைகளை ஒழித்துக்கட்டினேன். சில நாட்கள் கழித்து எங்கள் பகுதியில் மலேரியா கண்டிருப்பதாகக்கூறி மருந்தடிகக வந்தார்கள். தாராளமாக அடிக்கும்படி சொன்னேன். குழவிகளும்கரப்பொத்தான்களும் பூச்சிகளும் கூரையிலிருந்து தொப் தொப்பென்று விழுந்தன. சாதாரணமாக மழைகாலத்தில் வரும் நட்டுவக்காலி, மட்டைத்தேள், பூரான் கூட மறைந்துவிட்டன. எலிகள் கூட வீட்டில் நடமாட அஞ்சின.

ஆனுல், என்ன ஆச்சரியம்! திடீரென்று எங்கு பார்த்தாலும் மூட்டைகள் பெருகிவிட்டன. முற்றுக நிர்மூலம் செய்துவிட்டதாக நான் [...] மூட்டைப் பூச்சி மறுபடியும் எப்படி வந்தது? வேறு சிலரிடமும் இந்தஅனுபவத்தைப் பற்றி கேளவிப்பட்டேன்.

பூச்சிகளைக் கொல்வதற்காக அடிக்கப்படும் மருந்து பூச்சிகளை உற்பத்தியாக்குவதென்றல் வேடிக்கையாயல்லவா இருக்கிறது?

அந்தக் குடியானவனே இந்த மர்மத்துக்கு ஒரு மாதிரியான வியாக்கியானமும் கொடுத்தான். மூட்டை குடி புகுந்த வீட்டில் மூட்டைப் பூச்சிகள் எல்லாவற்றையும் அழித்துவிட்ட போதிலும் கருமையான சிறுசிறு புள்ளிகளாக அவற்றின் எச்சம் இருக்கும். இந்த மருந்து அதில் பட்டவுடனே மருந்தின் உஷ்ணமோ அல்லது அதிலுள்ள ஏதோ ஒரு சக்தியோ மறுபடியும் மூட்டைப்பூச்சிகளுக்கு உயிரூட்டிவிடுகிறது. மற்ற எல்லா வகையான பூச்சிகளையும் கொல்லும் மருந்து மூட்டைப் பூச்சிக்கு மட்டும் உயிர்ச்சத்தை ஊட்டிவிடுகிறது.

சுகாதாரப் பகுதியினரும் இந்த மர்மத்தை அறிந்துகொண்டு மூட்டைகளையும் கொல்லக்கூடிய வகையில் மருந்தைக்கலக்கிறர்களாம், ஆனுல் சூடு கண்ட பூனையைப் போல, எந்த நோயாவது வந்துவிட்டுப்போகட்டும், மூட்டைப்பூச்சியின் உபத்திரவம் வராமலிருந்துவிட்டால் போதும் என்ற நிலையில் சாதாரண கிராமவாசிகள் இருக்கின்றனர்.

இந்த மருந்தினுல் மூட்டைகள் தாமாகவே ஒருபோதும் உற்பத்தியாவதில்லை ஏற்கனவே மூட்டை இருந்த வீடுகளில்தான் அவை பெருகுகின்றன. பொதுமக்களிடையே எப்படியோ நிலைத்துவிட்ட இந்த மூட்டைப்பூச்சிப் பூச்சாண்டியைப்போக்குவதற்கு சுகாதாரப்பகுதி தீவிரமான பிரசாரம் செய்வதோடு, அடிக்கும் மருந்துடன் காரமான மூட்டைகொல்லி மருந்தையும் சேர்ககவேண்டும்.

'நுளம்பெண்ணை' என்று சாதாரண மக்களால் அழைக்கப்படும் இந்த நோய் தடுப்பு மருந்தை அடுக்களை முதலிய இடங்களிலும் அடிப்பதால் சாப்பிடும் உணவில் நச்சுத்தன்மை கலந்துவிடுமோ என்றும் சிலர் அஞ்சுவதாகத் தெரிகிறது. இதற்கு சிறிதேனும் ஆதாரம் கிடையாது. நச்சுத்தன்மையுள்ள மருந்தை அடிப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி கொடாது.

—வழிப்போக்கன்

கூறலாமென்றும் சொன்னர். அந்த உலகம் சுற்றிய தமிழர்.

அகிம்சாமூர்த்தியான மகாத்மாவையே சுட்டுக் கொன்றுவிட்டார்கள். இனி அவ்வித தலைவர்களுக்கு எங்கே போவது?

ஒரு நாட்டின் தலைவரென்றல் அவர் அந்நாட்டிலுள்ள எல்லா மக்களின் அபிமானத்தையும் விசுவாசத்தையும் பெற்ற பொதுத் தலைவராக இருக்க வேண்டும்.

ஆனுல் அப்பதவிக்கு ஜனநாயகம் எனும் பெயரால் இப்போதுள்ளதுபோல் தேர்தல் போட்டி வைப்பதாயின், ஒருசில அதிகப்படி

பூம்பொழில் நாவலூரான் வனப்பகையப்பன் சடையன்றன், சிறுவன் வன்றெண்டனூரன் பாடிய பாடல்பத்திவை வல்லவர், அறவனுரடி சென்று சேர்வதற்கு யாதுமையுறவில்லையே.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

## பங்குனி உத்தர விழா

கோப்பாய். திங்கள்

கோப்பாய் வடக்கு மகிழடி வைரவசுவாமி கோவிலில் பங்குனி உத்தர விழா கொண்டாடப்பட்டது. பகல்அன்னதானமும்விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு திரு. ப. தியாகராஜாவின் நூதன இன்னிசை விருந்தும், தமிழ் மணி திரு. வி. கணேசசுந்தரன் கோஷ்டியினரின் வில்லிசையும் சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

## திறைசேரி சுற்றறிக்கை

கோட்டை, திங்கள்

திறைசேரி சகல அரசாங்க இலாகா அதிபர்களுக்கும் கடந்தவருடம் செப்டம்பர் மாதம் நடாத்தப்பட தகுதிகான பரீட்சையில் சித்தியெய்திய சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்குமாறு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மாதச்சம்பளம் வழங்குமாறு குறிப்பிட்டுள்ளது.

27-3-70 முதல்

யாழ்-ராணி சினிமா

தினசரி மூன்று காட்சிகள்

★ ஜெய்சங்கர் (மூன்று வேடங்களில்)

★ விஜயநிர்மலா ★ புஷ்பலதா

★ பாலையா ★ சோ ★ எம். ஆர். ஆர். வாசு

நடித்த

சிரித்த முகம்

(பாஸ்கள் ரத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org